# இலங்கைப் பாராளுமன்றம்



# இலங்கை
# சுதந்திரப் பொன்விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கைப் பாராளுமன்றம்

# இலங்கை
# சுதந்திரப் பொன்விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை சுதந்திரப் பொன்விழா

## 50 ஆண்டுகாலப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே
பெப்ரவரி 1998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக் கொடி



அதி கௌரவ டீ. எஸ். சேனநாயக்க, பிரதம அமைச்சர், இலங்கையின் தேசியக் கொடி பற்றித் தனக்கு ஆலோசனை கூறுவதற்கெனப் பின்வருவோரைக் கொண்ட ஒரு குழுவை 1948, மார்ச் 6ஆந் தேதி நியமித்தார்.

கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க, பா. உ. (தவிசாளர்)
கௌரவ சேர் ஜோன் கொத்தலாவெல, பா. உ.
கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன, பா. உ.
கௌரவ ரீ. பி. ஜாயா, பா. உ.
கௌரவ கலாநிதி எல். ஏ. ராஜபக்ச கே. சீ., பா. உ.
கௌரவ ஜீ. ஜீ. பொன்னம்பலம் கே. சீ., பா. உ.
செனேற்சபை உறுப்பினர் கௌரவ எஸ். நடேசன் ஆகியோர்.
குழுவின் செயலாளர் கலாநிதி எல். பரணவித்தான

குழுவின் அறிக்கை பிரதிநிதிகள் சபையில் 1951, பெப்ரவரி 27ல் சமர்ப்பிக்கப்பட்டது. குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கொண்டுவரப்பட்ட பிரேரணை பிரதிநிதிகள் சபையில் 1951 மார்ச் 1ம், 2ம் திகதிகளில் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பிரேரணை செனேற் சபையில் 1951 மார்ச் 7ம் திகதி விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேசியக் கொடியானது, 1978, செப்ரெம்பர் 7ஆந் தேதியன்று பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஓர் அங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அதிமேதகு சனாதிபதியின் வாழ்த்துச்செய்தி | 09 - 10 |
| 02. | கௌரவ பிரதம அமைச்சரின் வாழ்த்துச்செய்தி | 11 - 12 |
| 03. | கௌரவ பாராளுமன்றச் சபாநாயகரின் வாழ்த்துச்செய்தி | 13 |
| 04. | கௌரவ பாராளுமன்றச் சபை முதல்வரின் வாழ்த்துச்செய்தி | 14 |
| 05. | கௌரவ எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச்செய்தி | 15 - 16 |
| 06. | கௌரவ உப சபாநாயகரின் வாழ்த்துச்செய்தி | 17 |
| 07. | கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளரின் வாழ்த்துச்செய்தி | 18 |
| 08. | முகவுரை | 19 |
| 09. | 50 ஆண்டுகாலப் பாராளுமன்றம் - திருமதி பிரியானி விஜேசேகர, பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் | 21 - 23 |
| 10. | சுதந்திரத்துக்குப் பின்னான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள். | 25 - 29 |
| 11. | தேர்தல்தொகுதி வாக்காளர்களுடன் நெருங்கிய ஈடுபாட்டுக்கான பாராளுமன்றத் தொழிற்பாடுகள் - திரு. டபிள்யு. பீ. டி. தஸநாயக்க, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் | 31 - 33 |
| 12. | இலங்கையின் மகாதேசாதிபதிகள் - (1948 - 1972) | 35 |
| 13. | இலங்கையின் சனாதிபதிகளும், நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதிகளும் - (1972 - 1998) | 37 - 39 |
| 14. | இலங்கையின் பிரதம அமைச்சர்கள் - (1947 - 1998) | 41 - 44 |
| 15. | பாராளுமன்றச் சபாநாயகர்கள் - (1947 - 1998) | 45 - 48 |
| 16. | சபை முதல்வர்கள் - (1947 -1998) | 49 - 51 |
| 17. | எதிர்க்கட்சித் தலைவர்கள் - (1947 -1998) | 53 - 55 |
| 18. | செனேற் சபைத் தலைவர்கள் | 57 - 58 |
| 19. | பாராளுமன்றச் செயலாளர் நாயகங்கள் | 59 |
| 20. | செனேற்சபைச் செயலதிபர்கள் | 61 |
| 21. | 1948 பெப்ரவரியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் | 63 - 65 |
| 22. | 1948 பெப்ரவரியில் செனேற் சபை உறுப்பினர்களாக இருந்தவர்கள் | 67 |
| 23. | 1998 பெப்ரவரி 04ஆந் திகதியன்று உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூன்றாவது பாராளுமன்ற உறுப்பினர்கள் | 69 - 74 |
| 24. | சுதந்திர இலங்கையின் பொன்விழாவைக் கொண்டாட வாய்ப்புப் பெற்றுள்ள முதலாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் (1948) | 75 - 76 |
| 25. | பாராளுமன்ற ஆக்க அமைவு - (1947 -1998) | 77 - 84 |
| 26. | பாராளுமன்றப் பேரவைகள் | 85 - 89 |
| 27. | பாராளுமன்றக் கூட்டத்தொடர்களின் காலநீட்சி | 91 - 96 |
| 28. | ஒவ்வொரு பாராளுமன்றத்தினதும் அமர்வு நாட்களின் எண்ணிக்கை | 97 |
| 29. | பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை - (1948 -1997) | 99 |
| 30. | இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுத் தலைவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் | 101 |
| 31. | இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்கள் (1947 -1998) | 103 - 118 |
| 32. | படங்களில் உள்ள சம்பவங்கள் | 119 - 130 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுதந்திரப் பொன்விழாவையொட்டி அதிமேதகு சனாதிபதி அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தி

2500 வருடங்களுக்கு மேற்பட்ட சரித்திரப் பாரம்பரியம் வாய்ந்தவொரு சமுதாயத்துக்கு, 50 வருடங்கள் ஒரு குறுகிய காலமாகும். எவ்வாறாயினும், கடந்த 50 ஆண்டுகள் எமது சரித்திரத்தில் ஒரு சகாப்தமாகும். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆந் திகதி நாம் எமது சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொண்டோம். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் முதலாவதாக, வெளிநாட்டுப் படைத்தளங்களை வெளியேற்றுவதன் மூலமும் இறுதியாக எமது நாட்டை இறைமையுள்ள குடியரசாகப் பிரகடனம் செய்வதன் மூலமும் எமது சுதந்திரம் பூரணப்படுத்தப்பட்டது.

சுதந்திரம் உதயமானபொழுது எமது தலைவர்கள் அதனை அரிய வாய்ப்புக்களை வழங்கும் ஒரு சந்தர்ப்பமாகவே கருதினர். அதாவது, இலட்சக்கணக்கான எமது நாட்டு மக்களின் நன்மைகளை மேம்படுத்துவதற்கும் எமது தேசிய தனித்துவத்தை மீள நிறுவுவதற்கும் அளிக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம் எனக் கருதினர்.

நாம் எமது வெற்றி தோல்விகளைக் கண்டுள்ளோம். நாம் எமது காலத்தைச் சிறந்த முறையில் கழித்துள்ளோமா என்பதை வருங்காலச் சரித்திராசிரியர்கள் தான் மதிப்பிட வேண்டும். பெரும்பாலான எமது மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளதென்பதை வலியுறுத்த வேண்டியதில்லை. கலாச்சாரம் புத்துயிர் பெற்றுள்ளது. நாம் கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், கலை, சட்டம், கைத்தொழில், தொழில்நுட்பம் ஆகிய துறை களில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளோம்.

எமது சரித்திரத்தின் தீர்க்கமான இந்த நேரத்தில் எமது சாதனைகள் பற்றிப் பெருமைப்படும் அதேவேளை எமது தோல்விகளையும் நாம் பணிவோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். பலதரப்பட்ட இனத்தவர்களை ஒன்றிணைத்து ஒரு பலம் வாய்ந்த இலங்கைச் சமுதாயத்தை அமைத்துக்கொள்ள நாம் தவறிவிட்டோம். எமது பொதுநோக்கங்களைப் பேணிப் பாதுகாப்பதற்குப் பதிலாக எமது சமுதாய அமைப்பில் பிளவுகள் தோன்றி அவைகள் மேலோங்க அனுமதித்ததன் மூலம் கடந்த 50 ஆண்டுகளாக நாம் தவறு இழைத்துள்ளோம்.

சில சாரார் தமது வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தும் செயல்களால் முழு அமைப்பிலிருந்து பிரிந்துவிடும் அளவுக்கு பிளவுகள் இப்பொழுது ஆழமடைந்துள்ளன. இது, இந்நாடு தன் முழுச் சரித்திரத்திலும் ஒருபோதும் கண்டிராத வருந்தக்கூடிய பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

தமது சகோதரர்களைத் தாமே அழித்துக்கொள்ளும் இந்த யுத்தத்தில் எமது இளைஞர்கள் கொன்றொழிக்கப்படுகின்றனர். பல கோடிக்கணக்குப் பெறுமதியான எமது தேசியச் சொத்துக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. சிறார்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் பயனுள்ள வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கும் உபயோகிக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பெருந்தொகையான பணத்தை யுத்த முயற்சிகளுக்காகச் செலவிடவேண்டி நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இனக்கலவரங்களினால் ஏற்பட்டுள்ள கசப்புத்தன்மைகளும், வன்செயல்களும் இல்லாமல் அடுத்த 50 வருடச் சுதந்திரக் கட்டத்தினுள் நாம் நுழையவேண்டுமானால், நாட்டின் ஒருமைப்பாடு பேணிப் பாதுகாக்கப்படுவதுடன் பலதரப்பட்ட இனத்தவர்களைக் கொண்டுள்ள இலங்கைச் சமுதாயத்துக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பரஸ்பர புரிந்துணர்வுகளையும் அளிக்க நாம் இணக்கம் காண வேண்டும்.

முதிர்ந்த அறிவுள்ள சமாதானப் பாதையைநோக்கி நாம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் நடைபோடுவோமானால் நாம் சரித்திரத்தின் ஒளிமயம்மிக்க காலப்பகுதியை அடைவோம்.

பெருந்தொகையான மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்பது எனது திடமான நம்பிக்கையாகும். அவர்களின் எண்ணங்கள் புரட்சிகரமாக மாறி இருக்கின்றன எனவும் நான் நம்புகின்றேன். எமது கசப்பான கடந்த காலத்தை மறந்து நாம் எல்லோரும் 21 ஆம் நூற்றாண்டை நோக்கி ஓர் ஒற்றுமையான, வலிமையுடைய எழுச்சிபெற்ற சமுதாயமாக நடைபோடுவோம் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

நாம், 1998 பெப்ரவரி 04 ஆந் திகதி சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடும் போது இது எமது உறுதிப்பாடாக இருக்கட்டும்.

உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்.



சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ பிரதம அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

பிரித்தானிய குடியேற்ற ஆட்சியிடமிருந்து நாம் சுதந்திரமடைந்த ஐம்பதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளை இலங்கையர்களாகிய நாம் எமது நாட்டில் இடம்பெற்ற பல சம்பவங்களையிட்டு மிக்க மகிழ்ச்சியடையலாம். குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றவர்களென்று எம்மில் மேலோங்கி நிற்கும் அம்மதிப்புணர்வே இவற்றுள் முதன்மையானது. நாம் சுதந்திரமான தேசமென்பதன் பெறுபேறாகப் பெறுமதிமிக்க பாரம்பரியத்தைப் பறைசாற்றி நிற்கும் எங்களது மொழி, கலைகள், சமயம் மற்றும் பொதுவில் எமது சொந்தக் கலாச்சாரம் என்பன தன்னகத்தே மேலோங்கி நிற்பதையிட்டும் நாம் மகிழ்ச்சியடையலாம். இதனைத் தொடர்ந்து கடந்த ஐம்பது ஆண்டுகளின் போது நாம் ஈட்டிய இச்சாதனைகளையும் விழுமியங்களையும் உலகத்தின் பார்வைக்கு வைத்துள்ளதன் காரணமாக இலங்கை பிரபல்யம் பெறுவதை உறுதி செய்துள்ளோம்.

திரு. பண்டாரநாயக்க 1956ம் ஆண்டு முன்னெடுத்த சமூக உருமாற்றமே 1948ம் ஆண்டு நாம் பெற்ற சுதந்திரத்திற்கு கூடிய கருத்துமிக்க விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதன்பின்னர் 1972ம் ஆண்டில் எனது ஆட்சிக் காலத்தின்போது இலங்கை ஒரு பூரணசுதந்திரமான இறைமையுடைய குடியரசாகப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து ஏனைய அந்நிய நாடுகள்பால் எம்மைப் பிணைத்திருந்த எச்ச சொச்ச அடிமைத்தளையும் முழுமையாக நீக்கப்பட்டது.

அவ்வாறு நாங்கள் ஈட்டிய விடுதலையை மேலும் பேணிப் பாதுகாக்க வேண்டுமெனில் ஏனைய நாடுகளின் ஆதரவையும் உதவியையும் நாம் எப்போதும் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடு என்ற முறையில் நாம் ஏனைய நாடுகளுடன் நிலையான நட்புறவைப் பேணுதல் வேண்டும். இத்துறையில் எமது வெளிநாட்டுக் கொள்கை மிக முக்கியமானதாகும்.

இலங்கை விவேகத்துடன் முன்/ கூட்டுச் சேராக் கொள்கையைப் பின்பற்றியதனால் நாம் எமது சுதந்ததிரத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவிக்கக்கூடியதாகவிருந்தது. கூட்டுச் சேராமை என்ற எமது பின்னணியின் காரணமாக சர்வதேசப் பிரச்சினைகளிலும் கூட நாம் மத்தியஸ்தம் செய்யும் நிலையில் இருந்தோம். அதனைத் தொடர்ந்து பெருந்தோட்டங்களைத் தேசிய மயப்படுத்திய அத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளின் விளைவாக எமது பூர்வீகச் சொத்தாகிய எங்கள் நாட்டின் நிலஉரிமையை நாம் உறுதிப்படுத்த முடிந்தது.

எமது சுதந்திரத்தின் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படும் இத்தினத்தைக் கொண்டாடும் இவ்வேளை எமது சுதந்திரத்தை ஒரே தேசமாக நின்று எந்தளவில் பேணிப் பாதுகாத்துள்ளோம் என்பதை நாம் மதிப்பிடுதல் முக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை வேண்டிப் போராடிய எமது முன்னைய தலைவர்கள் இனம், மதம், சாதி போன்ற இன்னோரன்னவற்றால் சிதறுணாது போராட்டத்தை ஒற்றுமையாக முன்னெடுத்தனர். அவ்வகையில் அவர்கள் சுதந்தரமென்ற இலக்கை எய்தினர். சுதந்திரத்தைக் கொண்டாடுமிவ்வேளை எமது தரப்பில் குறைபாடுகளேதுமிருப்பின் அவற்றை நாம் எண்ணிப்பார்த்து அத்தவறுகளைச் சீர்செய்ய வேண்டும். கூட்டொருமைப்பாடும் தேசிய ஒற்றுமையும் தான் இங்கு முக்கியமான காரணிகள். இலங்கையில் வாழும் ஒவ்வொரு வரினதும் மிகமுக்கிய பணியாக இதனை நான் கருதுவதோடு வருங்காலச் சந்ததியினருக்கு ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்தையும் நாம் உருவாக்க வேண்டும்.

நாம் சுதந்திரத்தின் அரைநூற்றாண்டைக் கொண்டாடும் இத்தருணத்தில், சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் போராடிய எமது தேசப்பற்று மிக்க தேசிய வீரர்களையும், எமது மூதாதையரையும் அவர்களது பெயர்கள் இப்போது வரலாற்றில் பொறிக்கப்பட்டிருப்பினும் இல்லாதுவிடினும், அவர்களை நாம் உளமாரப் போற்றி நினைவு கூருகிறோம். எமது நாட்டின் உரிமை, விடுதலை மற்றும் பாதுகாப்பிற்காக யுத்த முனையில் போராடித் தமதுயிரைத் தியாகம் செய்த தேசப்பற்று மிக்க வீரர்களையும் நாம் மனதில் பயபக்தியுடன் நினைவு கூருகிறோம்.

எமது சுதந்திரத்தின் தேசியச் சின்னமாகத் தேசியக்கொடியை நாம் மனவுறுதியுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதி பூணுவதோடு அதற்குரிய மரியாதையையும் தொடர்ந்து செலுத்துவோமாக.

பெருமையும் மதிப்பும் மிக்க மக்களென்ற எமது தேசியத் தனித்துவத்தை உலகத்தின் கண்முன் தோற்றுவோமாக.

**சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க**
**பிரதம அமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கௌரவ பாராளுமன்றச் சபாநாயகரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் சுதந்திரப் பொன்விழா வைபவத்தின் போது இந்தச் செய்தியை எழுதுவதில் நான் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்.

எமது பாராளுமன்றம் சென்ற 50 ஆண்டு காலத்தில் மூன்று அரசியல் யாப்புகளின் கீழ் இயங்கி வந்துள்ளது. இக்காலத்தில் இது பல்வேறு அரசியல் , இன, மற்றும் சமயக் கருத்துக்களைப் பிதிபலிக்கும் ஒரு துடிப்பான அரசியல் விவாத மன்றமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. எம் நாட்டின் மிகுந்த மேன்மை தங்கிய பிரஜைகளிற் சிலர் எமது பாராளுமன்றத்திலிருந்து இந்நாட்டு மக்களுக்குச் சேவையாற்றியுள்ளனர். இச் சந்தர்ப்பத்தில், பாராளுமன்றப் பாரம்பரியங்களையும் வழக்கங்களையும் நிலைநாட்டுவதற்குப் பெரிதும் உழைத்த எம் முதல் சபாநாயகராகிய காலம் சென்ற சேர் பிரான்சிஸ் மொலமூரே அவர்களுக்கும் அவர் வழிவந்தவர்களுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலத்திலும் புகழ்மிக்க தலைவர்கள் பலர் எமது பாராளுமன்றத்திற்கு வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.


இலங்கை புரட்சிகளினாலும், பயங்கரவாதத்தினாலும் பயமுறுத்தப்பட்ட போதிலும் எமது பாராளுமன்றம் தொடர்ந்து 50 ஆண்டுகளாக இயங்கி வந்துள்ளது. இது வருங் காலத்திலும் மக்களின் போற்றுதற்குரிய சனநாயக உரிமைகளைத் தொடர்ந்து பாதுகாக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். 1962 முதற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் நான், இந்த மகத்தான நிறுவனம் அதன் 50 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் என் மனமார்ந்த பாராட்டுதல்களை அதற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.



**கே. பீ. ரத்நாயக்க**
**சபாநாயகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராளுமன்றச் சபை முதல்வர் அலுவலகம்
பாராளுமன்றக் கட்டிடத் தொகுதி
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

# கௌரவ பாராளுமன்றச் சபைமுதல்வரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைப் பாராளுமன்றத்தின் 50 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தையொட்டிய இந்நினைவு மலர் வெளியீட்டில் நான் பங்கு கொள்வதில் பேருவகையடைகிறேன்.

1948, பெப்ரவரி 4ஆந் திகதி எமது நாட்டை ஆளும் பொறுப்பினை நாம் ஏற்றுக் கொண்ட பொழுது, மிகுந்த தன்னம்பிக்கையோடு தான் எமது சட்டமியற்றுநர்கள் புதிதாக அமைந்த பாராளுமன்றத்திலிருந்து பணியாற்றத் தொடங்கினர்.

சனநாயகமானது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. கடந்துபோன ஆண்டுகளில் காலமாற்றத்தின் தேவைகளுக்கும் எமது மக்கள் தம் மனதில் கொண்ட ஆசைகளுக்கும் ஒப்ப எமது பாராளுமன்றமும் தனக்கெனத் தனித்துவமான அரசியல் கலாச்சார முறையை விருத்தி செய்துகொண்டுள்ளது. நமது குடிமக்கள் பாராளுமன்றத்தில் தம்மை யார் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதில் அக்கறை கொண்டவர்களாய் உள்ளனர் என்பதை தேர்தல்களில் வாக்காளர் பங்கேற்ற அளவு எடுத்துக்காட்டுகிறது. பாரளுமன்றமானது ஓர் உயர்குடி மக்களின் நிறுவனமாகவோ முற்றிலும் உயர் தத்துவார்த்த நிறுவனமாகவோ இருக்கவில்லை. 1956ல் தேசிய கலாச்சாரம் புத்துயிர் பெற்றதும், சுதேச நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தமதிருக்கைகளில் அமர்ந்தனர். எனவே, எமது பாராளுமன்றம் நமது மக்களின் அரசியல் உறுதிப்பாட்டினதும் முதிர்ச்சியினதும் சின்னமாகத் திகழ்ந்து வருகிறது. சட்டமியற்றுபவராக, பொது அறத்தின் காவலராக, பொது நிதியத்தை வைத்துக் காப்பவராக கடந்த 50 ஆண்டுகளாக அது தொடர்ந்து பணியாற்றி வருகிறது. அதற்கு ஏற்ப பல்வேறு பிரச்சினைகளும் அதன் தனித்துவத்திற்கு மேலும் மெருகூட்டி வந்துள்ளன.

இந்த 50 ஆம் ஆண்டில் எமது நாட்டின் செழிப்பில் ஒரு திருப்பு முனையைக் காணலாம். இதன் தொடர்பில் பாராளுமன்றம் ஒரு தீர்க்கமான பங்கினை வகிக்க வேண்டியுள்ளது.

வரலாற்றின் இம்முக்கிய கட்டத்தில் பாராளுமன்றத்தின் சபை முதல்வர் பதவியை வகிப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியளிக்கிறது. இப்பாராளுமன்றம் எதிர்காலத்தில் பல்வேறு வெற்றிகளை ஈட்ட வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்.

**ரத்னசிறி விக்கிரமநாயக்க**
பாராளுமன்றச் சபை முதல்வரும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் டி. எஸ். சேனாநாயக்க அவர்களின் தலைமையின் கீழ் இலங்கை சுதந்திரம் அடைந்தது. காலனித்துவ ஆட்சியின் கட்டுக்களை அவிழ்த்து சுயாட்சிமிக்க அரசொன்றை ஏற்படுத்துவதற்கான சுதந்திரப் போர் வீரர்களின் போராட்டத்தின் உச்சக் கட்டமே இது.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்கு அமைதியான கிளர்ச்சியும், அரசியலமைப்பு மறுசீரமைப்பும் தான் அடிப்படையாக இருந்தன என்பதுடன் சுதந்திரமானது, குருதியினாலும், மரணத்தினாலும் அன்றி கடும் உழைப்பாலும் வியர்வையாலுமே பெறப்பட்டது. சட்ட ஆட்சி, சர்வஜன வாக்குரிமை மற்றும் ஜனநாயக வழிமுறைகள் பின்பற்றப்பட்டமை என்பன அதிகாரத்தை அமைதியாக மாற்றிக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தின. இலங்கையின் அனுபவமானது, இந்த வகையில் ஆசியாவில் தனித்துவமிக்கதாகும்.

நவீன உலகில் இலங்கை அரசொன்றை கட்டியெழுப்புதல் ஆரம்பகாலத் தலைவர்களின் முன்பிருந்த பெரும் சவாலாக இருந்தது. கிட்டத்தட்ட 400 வருடகால காலனித்துவ ஆட்சிமுறையின் கீழ் உலகம் வெகுவாக மாறி இருந்தது. முடியாட்சிகள் தேச அரசுகளாகப் பரிமாற்றமடைந்திருந்தன. கொடுங்கோல் ஆட்சிக்குப் பதிலாக ஜனநாயக நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. சாதி – வகுப்பு ரீதியாக அமையப்பெற்றிருந்த சமூகங்கள் அறிவுசார் ஆட்சிமுறையைப் பின்பற்றின. தனிமைப்படுத்தப்பட்டிருந்த குக்கிராமங்கள், புகையிரதப்பாதைகளாலும்,நெடுஞ்சாலைகளாலும் இணைக்கப்பட்டன. வளர்ச்சிப்படியில் இருந்த தொலைத்தொடர்புத்துறை மேலும் மக்களை ஒன்றாக இணைத்தது.

இப்புதிய உலகில் 1948ல் இவ்விளைய தேசம், தானே தனது வழியைத் தெரிவு செய்யத் தள்ளப்பட்டது. சுதந்திரமடைந்த அனேக நாடுகளைப் போன்று இலங்கையும் உலகமாற்றத்திற்கு ஏற்பத் தயார் நிலையில் இல்லாதிருந்தமையினால் சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து வந்த காலம் இலகுவானதாக இருக்கவில்லை. இதற்குப் பின் தோன்றிய வேறுபாடுகளும் பிரிவினைகளும் அனேகமாகத் தவிர்க்கப்படமுடியாதனவாகி விட்டன. இருப்பினும் ஜனநாயகத்தின் அத்திவாரம். இந்த எழுச்சிகள், முரண்பாடுகளுக்கு மத்தியிலும் உயிரோட்டமுடன் இருந்துள்ளது. இலங்கைப் பாராளுமன்றம், ஜனநாயகம் மீதான இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு ஜனநாயகம், நீதி என்பனவற்றை மாத்திரமன்றி அதன் மக்களின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கான முறைகளையும் வழிகளையும் கூட விவாதிக்கும், கலந்துரையாடும் இயக்கமுள்ள ஒரு முக்கிய உறுப்பாகியுள்ளது. எவ்வாறாயினும், ஜனநாயகம் என்பது; பிரதிநிதித்துவ ஆட்சியுரிமை மாத்திரமன்றி தனிநபர்களுடைய உரிமைகளைப் பேணுவதும் மற்றும் சுயமனித கௌரவத்தை மேம்படுத்துவதுமாகும். ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்னரும் இலங்கையின் அரசியல் சமுதாயம் இவற்றின் நல்ல விளைவுகளைத் தம்முள் கொண்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களில் பெரும்பகுதியினர் சுதந்திரத்தின் பிள்ளைகளாவோம். நாமும் எமது தேசமும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருந்தோம். நாங்கள் எமது முதலாவது சொல்லைக் கூட்டாகக் கூறினோம். எங்கள் ஆரம்பப்படிகளை நாம் ஒன்றாகவே எடுத்து வைத்தோம். பின்னர் வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒன்றாகவே எதிர்கொண்டோம். உலகில் எமது நாடு அதனது முத்திரையைப் பதிப்பதை அவதானித்தோம். குறிப்பாகக் கைத்தொழில் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறைகளில் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி எமது பொருளாதாரம் அபிவிருத்தியடைந்தது.

எமது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. காலனித்துவ பிரஜைகளென்ற அந்தஸ்திலிருந்து பிரித்தானிய பேரரசிடம் இருந்து பிரிந்து சம அந்தஸ்தோடு சர்வதேச சமுதாயத்துடன், எங்கள் சுதந்திர தேசத்தை ஒன்றிணைத்துக் கொள்வதற்கான வழிகளை இன்று நாம் கண்டு வருகின்றோம்.

ஒவ்வொரு தேசமும், புதிய சமுதாயத்தின் தேவைகள் மற்றும் பல்வகைப்பட்ட பாரம்பரிய கலாசார உரிமைகள் என்பனவற்றின் அடிப்படையில் அதற்குரிய கூட்டான தனித்துவத்தை ஏற்படுத்த வேண்டும். எம்மில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர்கள் இருக்கின்றனர். பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரினதும் தனித்துவம் இலங்கையர் என்ற கட்டுக்கோப்பினுள் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். நிபந்தனையற்ற முறையிலே ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய சமத்துவம் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். வகுப்பு, சாதி, அரசியல் நம்பிக்கைகள், மற்றும் மொழிரீதியான சலுகைகள் அனுமதிக்கப்பட முடியாதவை. குறிப்பாக, பொதுவான தேசிய பிணைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் இதுவரை நாம் வெற்றியடையாதிருப்பதனால், முறையான விவாத அரங்குகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது, நாட்டின் பல்வேறு பாகங்களிலும் தளநிலவரப்படி இலங்கையின் தனித்துவம் இன்று சோதனைக்கு உள்ளாகியுள்ளது.

எனினும், இது எங்களுடைய ஈடுபாட்டுக் கடப்பாட்டை மேலும் வலியுறுத்துவதற்குரிய ஒரு குறிக்கோளாக இருக்கின்றது. இந்தத் தேவைகளையும் மற்றும் 21ஆம் நூற்றாண்டின் சவால்களையும் எதிர்நோக்குவதற்கு, இலங்கை மக்கள் சமுதாயம் கணிசமான அளவு நெகிழ்வுத் தன்மையையும் வேண்டிய முதிர்ச்சியையும் கொண்டுள்ளது.



**ரணில் விக்கிரமசிங்க, பா. உ.**
**எதிர்க்கட்சித் தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ உப சபாநாயகரின்
## வாழ்த்துச் செய்தி

50 ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டின் சுதந்திரம் மலர்ந்த பின்னர் மூன்று முறை நமது பாராளுமன்றம் தன் பெயரை மாற்றிக் கொண்டுள்ளதெனினும், நமது மக்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும் சகல விடயங்களிலும் சட்டத்தின் ஆட்சியே மேலாதிக்கஞ் செலுத்துவதை உறுதிப்படுத்தும் முறையில் அது தனது பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துள்ளது. இக்காலப்பகுதி முழுவதிலும் பாராளுமன்றமானது, அரசியல் வானிலுள்ள சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் நமது மக்களின் மாபெரும் அரசியல் ஆர்வத்தை எப்பொழுதும் பிரதிபலித்து வந்துள்ளது.

நமது நாட்டின் சுதந்திரம் அறிவிக்கப்பட்ட தருணம் மாட்சிமை தங்கிய குளொசெஸ்டர் கோமகனால் வாசிக்கப்பட்ட ஆறாம் ஜோர்ஜ் மன்னரது செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு, 1796 ஆம் ஆண்டு நமது நாட்டில் பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தை குறிக்குமாயின், சர்வசனவாக்குரிமை அறிமுகமானதோடு ஏற்பட்ட அரசாங்கத்தை சனநாயக மயப்படுத்தும் நடைமுறையின் ஆரம்பத்தை 1931 ஆம் ஆண்டு குறிக்கும். இந்நடைமுறை நாம் சுதந்திரம் பெற்றதுடன் பூர்த்தியுற்றது.

எனினும், 1956இல் பிரதம அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களின் ஆட்சியின் கீழ் பிரித்தானிய படைத்தளங்கள் அகற்றப்பட்டதோடுதான் நமது நாடு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றது. கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் பிரதமராயிருந்த காலத்திலும் இந்நடைமுறை தொடர்ந்து நடைபெற்றது. இக்காலப்பகுதியில் நாடு ஒரு புதிய பெயரோடும் ஆயின், பழைய பாரம்பரியத்தோடும் கலாசார ரீதியாக முதிர்ச்சியடைந்தது.

நமது பாராளுமன்றத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கும் நிலையியற் கட்டளைகளின் கீழ் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. சபா மண்டபமானது, நமது நாட்டில் நிலவும் மொழி, கலாசாரம், சமயம் ஆகியவற்றின் பன்மைத் தன்மையை எப்பொழுதும் பிரதிபலித்து வந்துள்ளது.

உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் சபையின் மதிப்பைப் பேணவும் அதனை முடிந்தவரை ஒரு மக்கள் மன்றமாக ஆக்கவும் பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரை கௌரவ சபாநாயகர், அவர் இல்லாதபோது நான் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் கலந்தாலோசித்து வருகிறோம்.

1956ல் நான் முதன் முறையாகப் பாராளுமன்றத்துள் பிரவேசித்தபோது நான் கண்ட உயர் தரத்திலான விவாதம் தொடர்ந்து பேணப்படும் எனவும் எமது மக்களின் சனநாயக மனச்சாட்சியாக நமது பாராளுமன்றம் தொடர்ந்து விளங்குமெனவும் நான் நம்புகிறேன்.

அனில் முனசிங்க
உப சபாநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

எனது கருத்துப்படி சுதந்திரமடைந்து 50ஆம் ஆண்டு நிறைவென்பது களிப்படைய வேண்டியதும், மீட்டுப்பார்க்க வேண்டியதுமான ஒரு நிகழ்வாகும்.

எமது பாராளுமன்றத்தின் கடந்தகாலச் சம்பவங்களை நினைவுபடுத்தும் இந்த நினைவு மலரின் உள்ளடக்கங்களை மகிழ்ச்சியுடன் நோக்கும் அதேவேளை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரசியல் விழிப்புணர்ச்சி பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகவும் இதனை நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

முதலாவது குடியரசு அரசியலமைப்பு அதனை அறிமுகப்படுத்திய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் நிலைத்திருக்கவில்லை. அவ்வாறே இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பும், ஐ. தே. க. அதிகாரத்திலிருந்து அகன்ற பின் தற்போது தீவிர மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்திய கட்சிகளின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் இவை உயிர்ப்புடன் நிலைத்திருக்க முடியாமலிருப்பது ஏன் என்பதை நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாராளுமன்றத்திற்குப் புறம்பாக உருவாக்கப்பட்ட சக்திமிக்க நிறைவேற்று சனாதிபதிமுறை, பாராளுமன்றத்தை ஓரளவு மதிப்பிறக்கம் செய்தது. மிகக்கூடிய வாக்குகளைப் பெற்றவரைத் தெரிவுசெய்யும் முறை மாற்றப்பட்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்குச் செய்யப்பட்ட அடிப்படை மாற்றமானது எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தை வெகுவாக மாற்றிவிட்டது. சுற்றுப் பிரதேசங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் முயற்சியில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமை பங்கேற்கும் சனநாயக முறையில் புரட்சிகரமாற்றத்தை ஏற்படுத்தியது. இவற்றின் உள்ளமைப்பில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் சீராக்கத்துக்குத் தேவையான அம்சங்கள் என்பன அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றன.

பிராந்திய மட்டத்தில் வெஸ்ற்மினிஸ்டர் அரசாங்க முறையிலிருந்து விலகிச் செல்ல வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டமை மற்றுமொரு முக்கிய முன்னேற்றமாகும். அமைச்சரவை ஆட்சிமுறைக்குப் பதிலாக நிறைவேற்றுக் குழுக்கள் அமைப்பை பிராந்திய சபைகளில் அறிமுகப்படுத்தி இருப்பதானது தெரிகுழுவின் இக்கருத்தொருமைப்பாட்டை நிறைவேற்றுவதற்கேயாகும்.

கடந்த 50 வருடங்களில் ஏற்பட்ட சம்பவங்களினால் பெறப்பட்ட அனுபவமும் விவேகமும் அடுத்துவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கு அப்பாலும் கூட எமது அரசியல் நிறுவனங்கள், அவற்றின் கட்டமைப்புகள், நடைமுறைகள் ஆகியவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் செயல்முறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஏதுவாயிருக்கும்.

**ரவூப் ஹக்கீம், பா. உ.**

**குழுக்களின் பிரதித் தவிசாளர் – பாராளுமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இந்த நினைவு வெளியீடு, இந்நாடு சுதந்திரமடைந்ததன் பின்னரான பாராளுமன்ற வாழ்க்கையின் 50 ஆண்டுகளிலேற்பட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. இங்கே காலக்கிரமமாகத் தரப்பட்டுள்ள தகவல்கள் அரசாங்க மற்றும் அரசியல் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியனவாகவுள்ளன. இதனுள் குறிப்பிடப்பட்டுள்ள தனித்தன்மை வாய்ந்தவர்கள் ஒரு நிலையான மனப்பதிவை ஏற்படுத்துபவர்களாகவும் பாராளுமன்ற நிறுவனங்களின் மிக உயர்ந்த பாரம்பரியங்களைப் பேணுவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்களாகவும் விளங்குகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில், இப்பாராளுமன்றப் பணியாளர் தொகுதியில் பல்லாண்டுகாலம் திறம்படப் பணியாற்றி இந்த நிறுவனத்திற்கு மூலாதாரமானதும் அரசியல் சாராது மிகுந்த தனித்துவமுடையதுமான உயர் நிருவாகத் தரங்களைப் பேணுவதற்குப் பெரிதும் பாடுபட்ட பெரும் எண்ணிக்கையான பாராளுமன்றப் பணியாளர்களுக்கு என் நிலையான பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்காலகட்டத்தில் நான் இப்பதவியிலிருப்பது என் நற்பேறாகும். அதிட்டவசமாக என் சகபாடிகள் எனக்கு ஆதரவாகவும் விசுவாசமாகவும் நடந்து வந்துள்ளனர். இவர்களிற் பெரும்பாலானோர் கடினமான சூழ்நிலைகளிலும் கடமை உணர்ச்சியுடனும் உயர் கொள்கை அடிப்படையிலான அர்ப்பணிப்புடனும் தம் கடமைகளைச் செய்து வந்துள்ளனர்.

நாம் ஓர் "அமைதியான சேவை" ஆற்றிவருகிறோம். இந்தச் சேவை பாராளுமன்ற உறுப்பினர் யாவர்க்கும், அவர்கள் அரசாங்கத்தில் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, சமமாகக் கிடைக்கிறது. எவ்வாறாயினும், எமது பணியாளர் தொகுதியிலுள்ள சிலர் பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவைப் பெறமுனைவது தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய மனப்பான்மையை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். நிருவாகம் மற்றும் தகவல் தொழிநுட்ப முறைமைகள் பற்றிய அத்தியாவசிய புதிய கருத்துக்களை நாம் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் ஒரு சுதந்திரமானதும் நடுநிலைமையைப் பின்பற்றுவதுமான நிருவாகத்தை எப்பொழுதும் பேணுதல் வேண்டும் என்பதனை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளுதலும் வேண்டும். இந்தக் கருத்தை எமது சபை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன். செல்வாக்கைப் பயன்படுத்துதல், நெருக்குதல்களைக் கொண்டு வருதல் ஆகியன சில ஆண்டுகளாக நியாயமான அளவில் நிகழ்ந்து வருகின்றன. எவ்வாறாயினும், பாராளுமன்றத்தின் உத்தியோகத்தர் தொகுதியினர் புதிய அறைகூவல்களைத் துணிவுடன் எதிர்கொள்வர் என்பதில் எனக்கு ஐயமில்லை. இவ்வாறு நாம் செயற்படுவோமாயின், எமது பதவி மூலம் எதிர்பார்த்த உயர் பணிகளை நாம் அச்சமின்றி ஆற்றியுள்ளோம் என்பதனை இன்னும் 50 ஆண்டுகளில் எம் நாட்டு மக்கள் அறிந்து கொள்வர்.

**பேட்ரம் தித்தவெல்ல**

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆண்டுகாலப் பாராளுமன்றம்

**திருமதி பிரியானி விஜேசேகர, பாராளுமன்றப்**
**பிரதிச் செயலாளர் நாயகம்**

1948ம் ஆண்டில் இலங்கை (அப்பொழுது சிலோன்) சுதந்திரம் பெற்ற காலை, அது ஏற்கனவே பிரதிநிதித்துவ சனநாயகத்தில் அனுபவம் பெற்றிருந்தது. 1931ம் ஆண்டிலேயே, டொனமூர் அரசியலமைப்பின் கீழ், சர்வசன வாக்குரிமை பெற்றுவிட்டது. இலங்கையே (வெள்ளையர் குடியேறியிருந்த குடியேற்ற நாடுகள் தவிர்ந்த) குடியேற்ற நாடுகளில் முதன்முதலாக இந்தச் சிறப்புரிமையைப் பெற்றது. 1959ம் ஆண்டளவில் வாக்களிக்கும் வயது 21ல் இருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.

டொனமூர் அரசயலமைப்பின் கீழ் அரச சபை என அழைக்கப்பட்ட சட்டமன்றத்தில் 61 உறுப்பினர் இருந்தனர். இவர்களில் 50 பேர் பிராந்தியத் தொகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். ஏனைய எண்மரையும் தேசாதிபதி நியமித்தார்.

பின்னர் உயர்மட்டப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததன் விளைவாகச் சோல்பரி அரசியலமைப்பு 1947ல் கொண்டுவரப்பட்டது. இந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்ட அரசியலமைப்பு வெஸ்ற்மினிஸ்டர் மாதிரியிலமைந்ததாகும்.

1948, பெப்ரவரி 4ந் திகதி இலங்கை உண்மையான சுதந்திரத்தைப் பெற்றது. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஈரவையுடைய ஒரு சட்டமன்றம் தாபிக்கப்பட்டது. 101 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பிரதிநிதிகள் சபையையும் 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செனேற் சபை அல்லது மேற் சபையையும் கொண்டிருந்தது இச்சட்ட மன்றம். பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களில் 95 பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய அறுவரும் பிரதம அமைச்சரின் விதப்புரையின் பேரில் மகா தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர். செனேற் சபையின் 15 உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையினாலும் ஏனையோர் பிரதம அமைச்சரின் விதப்புரையின்படி மகா தேசாதிபதியினாலும் நியமிக்கப்பட்டனர். மகா தேசாதிபதி செனேற் சபை உறுப்பினர்களை நியமிக்கும் பொழுது இயன்றவரையில் பொதுவாழ்வில், உயர்தொழிலில், வர்த்தக அல்லது கைத்தொழில் துறையில் பிரபலமானவராக இருப்பவர்களைத் தெரிவு செய்ய முயலுதல் வேண்டுமென அரசியலமைப்புக் குறிப்பிட்டுள்ளது. இனம், சாதி, சமயம் போன்ற சில சிறுபான்மையினரின் அக்கறைகளுக்கெனச் சிலர் நியமிக்கப்பட்ட பொழுதிலும் இவர்களிற் பெரும்பாலோர் அரசியற் காரணங்களுக்காகவே தெரிவு செய்யப்பட்டனர். செனேற் சபை, பணத்தோடு சம்பந்தமில்லாத சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தின் இரண்டு அமர்வுகளுக்கு, அதாவது ஆகக் கூடுதலாக ஓர் ஆண்டு காலத்திற்கு மாத்திரம் ஏற்காது காலதாமதம் செய்யக்கூடிய அதிகாரம் பெற்றிருந்தது. பணம் சம்பந்தமான சட்டமூலங்களை செனேற் சபை கொண்டு வர முடியாது; இத்தகைய சட்டமூலங்களை ஒரு மாத காலத்திற்கு மாத்திரம் காலதாமதம் செய்யலாம். செனேற் சபை, காலப்போக்கில் கட்சி ஆதரவாளர்களுக்கு வெகுமதி வழங்குவதற்கு அல்லது குறிப்பிட்ட சில தொகுதியினருக்கு உருவகவடிவில் மதிப்பளிப்பதற்கு மாத்திரம் பயன்பட்ட நிறுவனம் எனப் படிப்படியாகப் பெயர் பெற்றுவிட்டது. எவ்வாறாயினும், 1960ம் ஆண்டில் பிரதம அமைச்சர் திருமதி சிறீமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களை செனேற் சபை உறுப்பினராக நியமிக்க இச்சபை பயன்படுத்தப்பட்டமை மிக முக்கிய சம்பவமாகும். எனினும், செனேற் சபை சட்டவாக்கங்களைக் காலதாமதப்படுத்த உதவும் ஒரு கருவியாகவும் அது மேலும் பயனளிக்கமாட்டாது எனவும் பின்னர் கருதப்பட்டமையினால் அது 1971ல் ஒழிக்கப்பட்டது. மகா தேசாதிபதி அரசின் பெயரளவிலான தலைவராகவும் மகாராணியின் பிரதிநிதியாகவும் கருமமாற்றி வந்தார். இது பல இன, பல சமய சமுதாயமுள்ள நாடாகையினால் ஒரு பக்கச் சார்பான வேறுபாடுகாட்டாக் கொள்கை பின்பற்றப்படுதல் வேண்டுமென்பதற்காக அரசியலமைப்பில் 29ம் உறுப்புரை சேர்க்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பில் திருத்தம் எதுவும் செய்யப்பட வேண்டுமாயின் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமெனவும் விதிக்கப்பட்டிருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக வந்த ஏழு அரசாங்கங்கள் இந்த அரசியலமைப்பின் கீழேயே இயங்கி வந்தன.

சோல்பரி அரசியலமைப்பின் படியான அரசாங்க முறைமையில் , நிருவாகம் ஒரு அமைச்சரவையையும் சட்டத்துறை, நீதித்துறை ஆகியவற்றையும் கொண்டிருந்தது. நிருவாகத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் சபையிலிருந்து நியமிக்கப்படுபவர்களாயும் அச்சபைக்குப் பொறுப்புள்ளவர்களாயும் பதவியில் தொடர்ந்திருப்பதற்கு அச்சபையில் தங்கியிருப்பவர்களாயுமிருந்தனர். எனினும், அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின்படி நீதி அமைச்சர் உட்பட அமைச்சரவை உறுப்பினர்களில் இருவராதல் செனேற் சபையிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

1970ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்ற ஆணையின்படியும் கிடைத்த பெரும் பாராளுமன்றப் பெரும்பான்மையின்படியும் இலங்கைக்கு ஒரு புதிய அரசியலமைப்பை ஆக்குவதற்கென ஓர் அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, 1972 மே 22ம் திகதி, முதல் குடியரசு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அரசியலமைப்பில் வெஸ்ற்மின்ஸ்டர் முறைமையிலுள்ள பெரும்பாலான அம்சங்கள் காணப்பட்டன. அரசு ஒற்றையாட்சித் தன்மையுடையதாயும் அரசாங்கம் பெரிதும் மத்தியமயப்படுத்தப்பட்டதாயுமிருந்தன. சனாதிபதி பெயரளவில் நிருவாகியாகவிருந்த போதிலும் உண்மையான அதிகாரம் பிரதம அமைச்சரின் கையிலேயே இருந்தது. புதிய அரசியலமைப்பின் கீழான தேசிய அரசுப் பேரவை, ஒற்றை அவையுடையதாயும் அரச அதிகாரத்தின் உச்சச் சாதனமாயுமிருந்தது. இச்சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 168 பிரதிநிதிகள் இருந்தனர். இந்த அரசியலமைப்பின் ஒரு மேலதிக அங்கமாக, சட்ட மூலங்கள் செல்லுபடியானவையா என விசாரணை செய்யும் சட்ட அதிகாரமுடைய அரசியலமைப்பு நீதி மன்று சேர்க்கப்பட்டிருந்தது.

முதல் குடியரசு அரசியலமைப்பின் காலம் மிகக் குறுகியதாகவிருந்தது. 1978, செப்ரெம்பர் 7ம் திகதி இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த அரசியலமைப்பு வெஸ்ற்மின்ஸ்டர் மாதிரியிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு மாறுபட்டதாகக் காணப்பட்டது. இந்தப் புதிய அரசியலமைப்பிலிருக்கும் குறிப்பிடத்தக்க சிறப்புக்கூறு விகிதாசாரப் பிரதிநித்துவ முறைமையாகும். இது தேர்தல் தொகுதியின் யதார்த்தப் பிரதிபலிப்பைக் கூடிய அளவில் உறுதிப்படுத்துவதாகும். இது அதிக அளவான பெரும்பான்மைப் பலம் தோன்றுவதைத் தடைசெய்வதாகவும் சிறுபான்மையினருக்குக் கூடிய பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்வதாகவுமிருக்கிறது. உப தேர்தல்கள் நடைபெறும் முறைமையையும் இந்த அரசியலமைப்பு ஒழித்துவிட்டது.

1978 அரசியலமைப்பின் கீழான பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் 196 பேர் மாவட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்படி தெரிவு செய்யப்படுவர். ஏனைய 29 ஆசனங்களும் அரசியல் கட்சிகளிடையிலும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தனிப்பட்ட குழுக்களிடையிலும் பகிர்ந்தளிக்கப்படும். 196 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மிகுதியான 29 ஆசனங்களையும் அரசியல் கட்கிகளிடையிலும் தனிப்பட்ட குழுக்களுக்கிடையிலும், அதே விகிதாசாரப்படி, தேர்தல் ஆணையாளர் பங்கீடு செய்வார். இதற்காக, ஒவ்வொரு கட்சியும் குழுவும் ஒரு பெயர்ப்பட்டியலை, நியமனங்கள் செய்யும் காலத்தில் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கும். இந்தப்பட்டியல் "தேசியப் பட்டியல்" என அழைக்கப்படும். இந்தப் பெயர்கள் வர்த்தமானியிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும். ஆசனங்களைப் பங்கீடு செய்யும்பொழுது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆசனத்திற்கு உரித்துடைய கட்சி அல்லது குழுவின் செயலாளர் அல்லது தலைவருக்குத் தேர்தல் ஆணையாளர், தகுதியானவர்களுடைய பெயர்களை ஒரு கிழமைக்குள் நியமிக்குமாறு அறிவிப்பார்.

1978ம் ஆண்டின் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதிப் பதவி, கருத்தறி வாக்கெடுப்பு, கட்சி மாறுவதற்கெதிரான சட்டம் போன்ற சில புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்தியது. இதன்கீழ் கருத்தறி வாக்கெடுப்பொன்று மட்டுமே 1982ல் இப்போதுள்ள பாராளுமன்றத்தின் கால எல்லையை நீடிப்பதற்கு நடத்தப்பட்டது. இந்த அரசியலமைப்பு அரசின் ஒற்றையாட்சித் தன்மையை வலியுறுத்துவதுடன் அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு ஒரு சிக்கலான நடைமுறையையும் விதித்துள்ளது. இந்த அரசியலமைப்பில் இதுவரை 15 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. 13ம் திருத்தம், பெரும் எண்ணிக்கையான அரச கருமங்கள் ஒதுக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை அறிமுகப்படுத்தியது. பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தின் ஒரு பகுதியும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம் 3 விடயங்களடங்கிய பட்டியல்களைக் கொண்ட ஒரு அட்டவணையையும் அறிமுகப்படுத்தியது; முதல் பட்டியல் மாகாண சபைகளின் கீழ்வரும் விடயங்களையும் இரண்டாம் பட்டியல் மத்திய அரசாங்கத்தின் கீழான விடயங்களையும் மூன்றாம் பட்டியல் ஒருங்கிணையும் விடயங்களையும் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், வட கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்துவரும் பயங்கரவாதப் பிரச்சினை காரணமாக, அரசியல் அதிகாரம் போதிய அளவில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்றே கருதப்பட்டு வந்துள்ளது. எனவேதான், இந்நாடு இன்னுமோர் அரசியலமைப்புச் சீர்திருத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையின் மத்தியில் இப்போதிருக்கிறது. பாராளுமன்றம் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் பொருட்டு இப்பொழுது ஒரு தெரிகுழுவை நியமித்துள்ளது.

பாராளுமன்றத்தின் முக்கிய செயற்பாடுகள் சட்டவாக்கம், நிருவாகத் துறை மேற்பார்வை, அரசாங்க நிதிக் கட்டுப்பாடு ஆகியனவாம். இவை தவிர, சிறப்புரிமை, அரசியல் குற்றச் சாட்டுக்கள் போன்ற ஓரளவு நீதித்துறை சார்ந்த கடமைகளும் இதற்குண்டு. பாராளுமன்றம் நவம்பர், டிசெம்பர் தவிர்ந்த ஏனைய மாதங்களில் சராசரி எட்டு நாட்கள் கூடும்; நவம்பர் டிசெம்பரில் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பற்றி விவாதித்து அதனை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ச்சியாக ஆறு வாரங்கள் கூடும். பாராளுமன்ற அலுவல்கள் நிலையியற் கட்டளைகளின்படி நடைபெறும். இங்கே பல்திறப்பட்ட குழுக்களின் முறைமையொன்றுண்டு.

பாராளுமன்றத்தின் பிரதிநிதியாக விளங்குபவர் சபாநாயகர் ஆவார்; ஒரு கூட்டு அமைப்பாகிய பாராளுமன்றத்தின் பேச்சாளரும் அவரே, பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றின் தனிப் பாதுகாவலராகவும் அவர் விளங்குகிறார். இவர் பாராளுமன்றக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதுடன் நிலையியற் கட்டளைகளின் பொருளை விளக்குவதுடன், அவற்றை நடைமுறைப்படுத்தியும் வருகிறார். இவருக்குப் பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் பிரதித் தவிசாளரும் உதவியாளர்களாகவிருக்கின்றனர்.

பாராளுமன்ற நிருவாகத்திற்குத் தலைவராகச் செயலாளர் நாயகம் விளங்குகின்றார். சபாநாயகருக்கும் தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் நடைமுறைகள் சம்பந்தமான ஆலோசனை வழங்குவதும் இவர் பொறுப்பாகும். பாராளுமன்றத்தில் பணியாற்றும் 750 பேர் வரையான உத்தியோகத்தர் ஐந்து திணைக்களங்களைச் சேர்ந்தவர்களாயுளர். நிருவாகம், படைக்கலச் சேவிதர், ஹன்சாட், உணவு வழங்கலும் இல்ல ஒழுங்கமைப்பும், இணைப்புப் பொறியியலாளர் என்ற பெயர்களிலேயுள்ளன இத்திணைக்களங்கள். ஹன்சாட் வெளியீடு, எந்த மொழியில் சபையில் பேசப்படுகிறதோ அதே மொழியில் சபை நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது. சபை நடவடிக்கைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எந்த மொழியிலுமிருக்கலாம்; இவை சமகாலத்தில் உரை பெயர்க்கப்படுகின்றன. இப்பொழுது நிகழ்த்தப்படும் பேச்சுக்களில் ஏறத்தாழ 60 சதவீதம் சிங்களத்திலும் 35 சதவீதம் ஆங்கிலத்திலும் 5 சதவீதம் தமிழிலும் நடைபெறுகின்றன. சட்டங்கள், துணைச் சட்டவாக்கங்கள் யாவும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஆக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

1948ம் ஆண்டில் இப்பாராளுமன்றம் கொழும்பு கோட்டையில், ஒரு கவர்ச்சியான கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பொதுச் செயலகமும் இங்கேயேயிருந்தது. கொழும்பில் இட நெருக்கடி அதிகரித்து வந்தமையாலும் உறுப்பினரினதும் மற்றும் பணியாளர்களினதும் எண்ணிக்கை கூடி வந்தமையினாலும் ஜயவர்தனபுர கோட்டேயில் இதற்கென அமைக்கப்பட்ட அற்புதமான, ஒரு புதிய கட்டிடத்திற்கு இது 1982ல் நகர்த்தப்பட்டது. இது செயற்கையாக ஆக்கப்பட்ட ஓர் ஏரியினால் சூழப்பட்ட ஒரு தீவில் அமைந்துள்ளது. இப்பாராளுமன்றம் இங்கே பல்லாண்டுகாலம் நிலைத்திருந்து, இந்நாட்டு மக்கள் வாழ்க்கையில் சென்ற 50 ஆண்டு காலமாக ஆற்றிவந்த அரும் கருமங்களைத் தொடர்ந்து ஆற்றுமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்திற்குப் பின்னான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்

இலங்கை 1948, பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரமடைந்த பொழுது, 'சோல்பரி அரசியலமைப்பு' எனப் பொதுவாகக் குறிப்பிடப்படும் அதன் அரசியலமைப்பு பின்வரும் ஆவணங்களைக் கொண்டிருந்தது.

1. இலங்கைச் சுதந்திரச் சட்டம், 1947
2. 1946, 1947ம் ஆண்டுகளின் பேரவைக் கட்டளைகள்; இவை இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும் பேரவைக் கட்டளைகள், 1947 எனக் கூட்டாகக் குறிப்பிடப்படும்.

இந்த அரசியலமைப்பு ஒரு பாராளுமன்ற முறையான அரசாங்கத்தை இலங்கைக்கு ஏற்பாடு செய்தது. பாராளுமன்றம் (மகா- தேசாதிபதியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட) இராணியையும் சட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கும் செனேற் சபை, பிரதிநிதிகள் சபை என்ற இரு சபைகளையும் கொண்டிருந்தது. நிறைவேற்றுச் சபை பிரதம அமைச்சரையும் அமைச்சரவையையும் கொண்டிருந்தது. பிரதிநிதிகள் சபை 101 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இவர்களில் 95 உறுப்பினர்கள் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்; ஏனைய அறுவர் மகா தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர். பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் எண்ணிக்கை எந்நாளும் ஒரே அளவில் இருக்குமெனத் தீர்மானிக்கப்படவில்லை. அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் முடிந்தவுடன் தொகுதி நிர்ணய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். மக்கள் தொகையில் மாற்றமேற்படுவதற்கேற்ப உறுப்பினர்கள் எண்ணிக்கையும் மாறுபடும். 1959ன் தொகுதி நிர்ணய ஆணைக்குழு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரின் எண்ணிக்கையை 151 ஆக அதிகரிக்கச் செய்தது. சனப் பிரதிநிதிகள்சபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

செனேற் சபை 30 உறுப்பினரைக் கொண்டிருந்தது. இவர்களில் 15 உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையினால் தெரிவு செய்யப்பட, ஏனைய 15 பேரும் மகா- தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர். செனேற் சபை உறுப்பினரில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டு முடிவிலும் இளைப்பாற வேண்டியவர்களாவர். செனேற் சபை 1971 ஒக்டோபர் 2 அன்று ஒழிக்கப்பட்டது.

அரசியலமைப்பில் நீதிச்சேவை ஆணைக்குழு, அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 29 (2) உறுப்புரை சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தது.

அரசியலமைப்பை மீளாய்வு செய்வதற்காக திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க கொண்டு வந்த ஒரு பிரேரணையின்படி 1958, சனவரி 10 அன்று செனேற் சபையையும் பிரதிநிதிகள் சபையையும் கொண்ட ஒரு கூட்டுத்தெரிகுழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது. இந்த அறிக்கைகளில் சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தனவாயினும் பாராளுமன்றம் 1959 மே 23ம் திகதி தள்ளி வைக்கப்பட்டமையினால் அக்குழுவினால் அந்த வேலைகளைச் செய்து முடிக்க இயலாமற் போயிற்று. இக்குழு மீள நியமிக்கப்படவில்லை.

டட்லி சேனநாயக்க அரசாங்கமும் அரசியலமைப்பை மீளாய்வு செய்வதற்கென ஒரு கூட்டுத் தெரிகுழுவை 1967, ஏப்பிரல் 22ம் திகதி நியமித்தது. இந்தக் குழுவும் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது. இரண்டாம் அறிக்கை 1968, யூன் 13ம் திகதி பிரதிநிதிகள் சபையில் வெளியிடப்பட்டது. இக்குழு, 1968 யூன் 22ம் திகதி பாராளுமன்றம் தள்ளிவைக்கப்பட்டபின் மீள நியமிக்கப்படாமையினால் தன் வேலையைச் செய்து முடிக்க இயலாது போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சட்டம் இல. | அங்கீகரித்த திகதி | பொருளடக்கம் |
|---|---|---|
| இல. 29 - 1954 | 06.07.1954 | 1954ம் ஆண்டின் 35ம், 36ம் இலக்கச் சட்டங்களை நிறைவேற்றுவதற்காக 29 (2) பிரிவைத் திருத்துவதற்கு |
| இல. 35 - 1954 | 16.07.1954 | ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கையை 105 ஆகக் கூட்டுவதற்கும் அப்பொழுதிலிருந்த தொகுதி நிர்ணய ஆணைக் குழுவினரின் சேவைகளை நிறுத்துவதற்கும் |
| இல.36 - 1954 | 16.07.1954 | 1949ம் ஆண்டின் 3ம் இலக்க இந்திய, பாகிஸ்தானிய வாசிகள், (பிரசாவுரிமை) சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரசைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்ய ஏற்பாடு செய்வதற்கும். |
| இல.4 - 1959 | 06.02.1959 | தொகுதி நிர்ணய ஆணைக்குழு நியமிப்பதற்கு ; பாராளுமன்றச் செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கும் 1954ம் ஆண்டின் 35ம், 36ம் இலக்கச் சட்டங்களை நீக்குவதற்குமாக 47ம் பிரிவைத் திருத்துவதற்கு. |
| இல. 71 - 1961 | 30.12.1961 | 55ம் பிரிவின் கீழ் "தேர்தல் நீதிபதி" என்பதைச் சேர்ப்பதற்கு |
| இல. 8 - 1964 | 12.03.1964 | அரசியலமைப்பில் தேர்தல்கள் ஆணையாளர் என்ற பதவியை இடுவதற்கும் தேர்தல்கள் நடத்துவதற்கு நிதி ஏற்பாடு செய்வதற்கும் |
| இல. 29 - 1970 | 18.11.1970 | அரசாங்க உத்தியோகத்தர்கள் (குறிப்பிட்ட சில வகுதிகளிலுள்ளவர்கள் தவிர) தேர்தல்களில் போட்டி யிடவும் செனேற் சபைக்குத் தெரிவு செய்யப்பட அல்லது நியமனம் பெறத் தகுதியுள்ளவர்களாக்கவும் அனுமதிப்பதற்கு |
| இல. 36 1971 | 02.10.1971 | செனேற் சபையை ஒழிப்பதற்கு |

1970, மே மாதம் அதிகாரத்திற்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம், ஒரு புதிய அரசியலமைப்பை ஆக்குவதற்குத் தம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்கள் ஆணையைக் கோரியிருந்தது. அரசியல் நிர்ணய சபையாக இயங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆக்கப்பட்ட ஒரு புதிய குடியரசு அரசியலமைப்பு 1972, மே 22ம் திகதி பிரகடனம் செய்யப்பட்டது. இந்த அரசியலமைப்பில் தேசிய அரசுப் பேரவை என்ற ஒரே அமைப்பாயுள்ள சட்டசபை, பெயரளவிலான ஒரு சனாதிபதிப் பதவி, தேசிய அரசுப் பேரவைக்குப் பொறுப்புள்ள பிரதம அமைச்சரின் தலைமையிலான ஓர் அமைச்சரவை ஆகியன ஏற்பாடு செயயப்பட்டிருந்தன. தேசிய அரசுப் பேரவை ஆறு ஆண்டுகள் நிலைத்திருப்பதாயும் அரசிறைமை முழுவதையும் உடையதாயுமிருந்தது. சென்ற பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களே முதல் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்களாயுமமைந்தனர். தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்படி தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். நியமன உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை.

பிரதம அமைச்சரால் நியமிக்கப்படும் சனாதிபதியின் பதவிக் காலம் 4 ஆண்டுகளாகவிருக்கும்.

இந்நாடு இலங்கைக் குடியரசு என மீளப்பெயரிடப்பட்டது. (ஒளி வீசும் தீவு என்ற கருத்துடையதாகும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுய இயக்கத் தன்மை பற்றிய ஒருபிரகடனமுண்டு. சட்டமாக்கப்படுவதற்கு முன் அச்சட்டம் அரசியலமைப்போடு இசைவானதா என்பதைப் பரிசோதிப்பதற்காக ஒரு விசேட அரசியலமைப்பு நீதிமன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நீதிச்சேவை ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை.

இந்த அரசியலமைப்பு 1975 பெப்ரவரி 11ம் திகதி, ஒரு தொகுதியில் 75,000 பேர் என்பதை 90,000 பேர் எனத் தேர்தல் தொகுதி நிர்ணய அடிப்படையில் மாற்றம் செய்வதற்காகத் திருத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி யூலை 1977ல் ஆறில் ஐந்து பங்குப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தபொழுது நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியைக் கொண்டுவருவதற்காக 1972ம் ஆண்டு அரசியலமைப்புக்கான இரண்டாம் திருத்தம் 1977 ஒக்ரோபர் 4ம் திகதி நிறைவேற்றப்பட்டு அப்போது பிரதம அமைச்சராயிருந்த திரு. ஜே. ஆர். ஜயவர்தன 1978, பெப்ரவரி 4ம் திகதி, முதலாம் நிறைவேற்று அதிகார சனாதிபதியானார். ஐக்கிய தேசியக் கட்சியும், 1977 பொதுத் தேர்தலின் முன்னர், ஒரு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்காக மக்களிடமிருந்து ஓர் ஆணையைக் கோரியிருந்தது. அரசியலமைப்பைத் திருத்தியமைப்பதற்காக ஒரு தெரிகுழு நியமிக்கப்பட்டது. 1978 செப்ரெம்பர் 7ம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட புதிய அரசியலமைப்பு, சட்டவாக்க அதிகாரம் மற்றும் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி பதவி ஆகியவற்றுடன் கூடிய ஒரே சபையாயுள்ள பாராளுமன்றத்திற்கு ஏற்பாடு செய்தது. சனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் கால எல்லை ஆறு ஆண்டுகளாக்கப்பட்டது. அத்துடன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையும் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றம் 196 உறுப்பினரைக் கொண்டிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த பொழுதிலும் பின்னர் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் பதினான்காம் திருத்தத்தின் மூலம் இந்த எண்ணிக்கை 225 ஆகக் கூட்டப்பட்டது.

இந்த அரசியலமைப்பில் சுதந்திரமான நீதித்துறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அடிப்படை உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது. இந்த உரிமைகள் எவருக்கும் மறுக்கப்படுமாயின் அவர் உயர் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அரசியலமைப்பில் ஒம்புட்ஸ்மன் எனப்படும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ஒருவரை நியமிக்கவும் இடமளிக்கப்பட்டது. இவர், அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், அரச உத்தியோகத்தர் ஆகியோருக்கெதிராகப் பொதுமக்களிடமிருந்து ஏதாவது முறைப்பாடு கிடைக்குமாயின் அதை விசாரித்து ஆவன செய்வார். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை, கட்சி மாறுவதற்கெதிரான சட்டங்கள் என்பவற்றுக்கும் குறிப்பிட்ட சில சட்டமூலங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் சம்பந்தமாக மக்கள் கருத்தறி வாக்கெடுப்பு நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1978ம் ஆண்டின் அரசியலமைப்புக்கான திருத்தங்கள்

| திருத்தம் | அங்கீகரித்த திகதி | பொருளடக்கம் |
|---|---|---|
| முதல் திருத்தம் | 20.11.1978 | மேல்முறையீட்டு மன்றின் நியாயாதிக்கம் பற்றியது. |
| இரண்டாம் திருத்தம் | 26.02.1979 | முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகுதல், அவர்களை வெளியேற்றுதல் ஆகியன பற்றியது. |
| மூன்றாம் திருத்தம் | 27.08.1982 | சனாதிபதியை 4 ஆண்டுகளின்பின் மீண்டும் தெரிவு செய்விக்க முனைவது; சனாதிபதி பதவியை விட்டு நீங்கல் சம்பந்தமானது. |
| நாலாம் திருத்தம் | 23.12.1982 | முதல் பாராளுமன்றத்தின் காலத்தை நீடித்தல் |
| ஐந்தாம் திருத்தம் | 25.02.1983 | வெற்றிடம் கட்சியினால் நிரப்பப்படாதபொழுது உப தேர்தலுக்கு ஏற்பாடு செய்தல் |
| ஆறாம் திருத்தம் | 08.08.1983 | பிராந்திய எல்லை பாதிக்கப்படுதலைத் தடைசெய்தல் |
| ஏழாம் திருத்தம் | 04.10.1983 | மேல் நீதிமன்ற ஆணையாளர்கள் பற்றியதும் கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்குவதும் |
| எட்டாம் திருத்தம் | 06.03.1984 | சனாதிபதி வழக்குரைஞர் நியமனம் |
| ஒன்பதாம் திருத்தம் | 24.08.1984 | தேர்தல்களில் போட்டியிடத் தகுதிபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் பற்றியது. |
| பத்தாம் திருத்தம் | 06.08.1986 | பொதுசன பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான பிரகடனத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்ற பிரிவை நீக்குதல் |
| பதினோராம் திருத்தம் | 06.05.1987 | நாடு முழுவதற்குமான 'பிஸ்க்கால்' ஒன்றை ஏற்பாடு செய்தல்; அத்துடன் மேல் முறையீட்டு நீதிமன்றின் அமர்வு தொடர்பானதும் |
| பன்னிரண்டாம் திருத்தம் | | (சட்டமாக்கப்படவில்லை) |
| பதின்மூன்றாம் திருத்தம் | 14.11.1987 | தமிழை உத்தியோகபூர்வ மொழியாகவும், ஆங்கிலத்தை ஓர் இணைப்பு மொழியாகவும் ஆக்குதல்; அத்துடன் மாகாண சபைகளையும் தாபித்தல் |
| பதினான்காம் திருத்தம் | 24.05.1988 | சனாதிபதியின் காப்புரிமையை நீடித்தல்; உறுப்பினர் எண்ணிக்கையை 225 ஆகக்கூட்டுதல்; கருத்தறிவாக்கெடுப்பு நடத்துவதைச் செல்லுபடியாக்குதல்; தேர்தல் மாவட்டங்களை வலயங்களாக வகுப்பதற்குத் தொகுதி நிர்ணய ஆணைக்குழு நியமித்தல்; விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் மொத்த வாக்குகளில் 1/8 வெட்டுப் புள்ளியாக இருப்பதும்; 29 தேசியப்பட்டியல் உறுப்பினர்களையும் பகிர்ந்தளித்தல். |
| பதினைந்தாம் திருத்தம் | 17.12.1988 | வலயங்களை நீக்குவதற்காக 96ஏ உறுப்புரையைத் தள்ளுபடி செய்தலும் வெட்டுப்புள்ளியை 1/20 ஆகக் குறைத்தலும். |
| பதினாறாம் திருத்தம் | 17.12.1988 | சிங்கள மற்றும் தமிழ் மொழிகளை நிருவாக மற்றும் சட்டவாக்க மொழிகளாக ஏற்பாடு செய்தல். |

1981 சனவரி 6ம் திகதி இன்னொரு மூன்றாம் திருத்தம், ஒரே தொகுதியில்(கலவானை) இரண்டு உறுப்பினர் இருப்பதற்காக, கொண்டுவரப்பட்டது; ஆனால் இந்தத் திருத்தம் ஒரு கருத்தறி வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தமையினால் இது சட்டமாகவில்லை. 1987 செப்ரெம்பர் 25ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பன்னிரண்டாம் திருத்தம், சனாதிபதி இல்லாத நேரத்தில் அவருக்காகப் பிரதம அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைபார்ப்பதற்கெனத் தனிப்பட்ட உறுப்பினர் ஒருவரால் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்ட மூலம் எல்லாக் கட்டங்களையும் தாண்டாமையினால் அது சட்டமாக வில்லை. அடிப்படை உரிமைகள் தொடர்பான சில பிரிவுகளைத் திருத்துவதற்காகப் பதினேழாம் திருத்தம் 1990 நவம்பர் 14ம் திகதி கொண்டுவரப்பட்டதாயினும் அச்சட்டமூலம் 1991 யூலை 23ம் திகதி மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

| கௌரவ (திருமதி) பவித்ரா வன்னிஆரச்சி | - | பொ. ஐ. மு. |

**திருகோணமலை மாவட்டம்**

| | | |
|---|---|---|
| திரு. எம். என். அப்துல் மஜீத் | - | ஸ்ரீ. ல. மு. கா. |
| திரு. சுனில் ரணவீர | - | ஐ. தே. க. |
| திரு. இராஜவரோதயம் சம்பந்தன் | - | த. வி. கூ |
| திரு. ஆரியபால வல்பிட்டகம | - | ஐ. தே. க. |

**வன்னி மாவட்டம்**

| | | |
|---|---|---|
| கௌரவ எஸ். எஸ். எம். அபூபக்கர் | - | ஸ்ரீ. ல. மு. கா. |
| திரு. வீ. பாலசந்திரன் | - | ஐ. ம. வி. மு. |
| திருமதி ஆர். எம், புலேந்திரன் | - | ஐ. தே. க. |
| திரு. எஸ். சண்முகநாதன் | - | ஐ. ம. வி. மு. |
| திரு. த. சித்தார்த்தன் | - | ஐ. ம. வி. மு. |
| கௌரவ பி. சுமதிபால | - | பொ. ஐ. மு. |

**தேசிய பட்டியல்**

| | | |
|---|---|---|
| கௌரவ எஸ். அலவி மௌலானா | - | பொ. ஐ. மு. |
| அல்ஹாஜ. ஏ. எச். எம். அஸ்வர் | - | ஐ. தே. க. |
| கௌரவ (திருமதி) சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க | - | பொ. ஐ. மு. |
| திரு. அநுர பண்டாரநாயக்க | - | ஐ. தே. க. |
| திரு. கே. என். சொக்ஸி | - | ஐ. தே. க. |
| கௌரவ வை. பி. த. சில்வா | - | பொ. ஐ. மு. |
| திருமதி அமரபத்ரா திஸாநாயக்க | - | ஐ. தே. க. |
| திரு. தினேஷ் தொடங்கொட | - | ஐ. தே. க. |
| திரு. ஏர்ல் குணசேகர | - | ஐ. தே. க. |
| திரு. கேசரலால் குணசேகர | - | பொ. ஐ. மு. |
| கௌரவ ரஊப் ஹக்கீம் | - | பொ. ஐ. மு. |
| திரு. டி. எச். என். ஜயமஹ | - | ஐ. தே. க. |
| டாக்டர் ஜயலத் ஜயவர்தன | - | ஐ. தே. க. |
| கௌரவ லக்ஷ்மன் கதிர்காமர் | - | பொ. ஐ. மு. |
| திரு. ரவி கருணாநாயக்க | - | பொ. ஐ. மு. |
| திரு. உபாலி சரத் கோங்கஹகே | - | ஐ. தே. க. |
| கௌரவ பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் | - | பொ. ஐ. மு. |
| திரு. அசித பெரேரா | - | ஸ்ரீ. ல. மு. கா. |
| திரு. ஏ. எம். டி. ராஜன் | - | ஐ. தே. க. |
| கௌரவ கே. பீ. ரத்நாயக்க | - | பொ. ஐ. மு. |
| திரு. ஆரிய பீ. ரெக்கவ | - | ஐ. தே. க. |
| கௌரவ தர்மசிறி சேனாநாயக்க | - | பொ. ஐ. மு. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| டாக்டர் ராஜித சேனாரத்ன | – | ஐ. தே. க. |
| திரு. கே. பி. சில்வா | – | பொ. ஐ. மு. |
| கௌரவ எஸ். தொண்டமான். | – | ஐ. தே. க. |
| கலாநிதி நீலன் திருச்செல்வம் | – | த. வி. கூ. |
| கௌரவ பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஷ்வா வர்ணபால | – | பொ. ஐ. மு. |
| திரு. பெட்டி வீரகோன் | – | பொ. ஐ. மு. |
| திரு. எம். எம். சுஹைர் | – | பொ. ஐ. மு. |

| | | |
|---|---|---|
| ஜ . ம. வி. மு. | – | ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி |
| சுயே – நு.எலிய | – | சுயேட்சை நுவரெலியா |
| சுயே 2 யாழ் | – | சுயேட்சைக் குழு 2 – யாழ்ப்பாணம் |
| பொ. ஐ. மு. | – | பொதுஜன ஐக்கிய முன்னணி |
| ஸ்ரீ. ல. மு. கா. | – | ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் |
| ஸ்ரீ. ல. மு. மு. | – | ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி |
| த. வி. கூ | – | தமிழர் விடுதலைக் கூட்டணி |
| ஐ. தே. க. | – | ஐக்கிய தேசியக் கட்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர இலங்கையின் பொன்விழாவைக் கொண்டாட வாய்ப்புப்பெற்றுள்ள முதலாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் (1948)



திரு. ஹென்றி டயஸ் அபேகுணவர்தன
மாத்தறை



திரு. சம்ளி த ஃபொன்சேக்கா குணவர்தன
களுத்துறை



மேஜர் மொன்டேகு ஜயவிக்கிரம
வெலிகம



திரு. பிரமலால் குமாரசிறி
ஹக்மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர இலங்கையின் பொன்விழாவைக் கொண்டாட வாய்ப்புப்பெற்றுள்ள முதலாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் (1948)



திரு. கந்தப்பிள்ளை
வேலுப்பிள்ளை நடராஜா
பண்டாரவளை



திரு. மைத்திரிபால
சேனாநாயக்க
மதவாச்சி



திரு. சௌமியமூர்த்தி தொண்டமான்
நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற ஆக்க அமைவு (1947 - 1998)

| காலம் | சட்டவாக்க சபையின் பெயர் | 1947 – 1972 | | | | | 1972 – 78 | | 1978 – 98 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இராணி | | | | | சனாதிபதி | | நிறைவேற்று சனாதிபதி | | |
| | | மகா தேசாதிபதி | | | | | தே. அ. பே. | | பாராளுமன்றம் | | |
| | | பாராளுமன்றம் பி. அ. | | | | | பி. அ. | | பி. அ. | | |
| | | செனேற் | | பி / ச | | | | | | | |
| | | தெ. | பெ. | தே.மா | தே. | நி. | தே.மா. | தெ. | தே.மா | தெ. | தே. ப. |
| 1947-52 | 1 ஆம் பா.(பி/ச) | 15* | 15* | 89# | 95* | 6* | | | | | |
| 1952-56 | 2 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 89 | 95 | 6 | | | | | |
| 1956-59 | 3 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 89 | 95 | 6 | | | | | |
| 1960 மார்ச் | 4 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 145+ | 151+ | 6 | | | | | |
| 1960-65 | 5 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 145 | 151 | 6 | | | | | |
| 1965-70 | 6 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 145 | 151 | 6 | | | | | |
| 1970-72 | 7 ஆம் பா.(பி/ச) | 15 | 15 | 145 | 151 | 6 | | | | | |
| 1972-77 | 1 ஆவது தே.அ.பே | | | | | | 145** | 157** | | | |
| 1977-78 | 2 ஆவது தே.அ.பே | | | | | | 160++ | 168++ | | | |
| 1978-88 | 1 ஆம் பா.ச.சோ.கு | | | | | | | | 160 | 168 | |
| 1989-94 | 2 ஆம் பா.ச.சோ.கு | | | | | | | | 22 | 196*** | 29+++ |
| 1994 | 3 ஆம் பா.ச.சோ.கு | | | | | | | | 22 | 196 | 29 |

ச. சோ. கு. – சனநாயக சோசலிசக் குடியரசு
பி.ச. – பிரதிநிதிகள் சபை
தே. அ. பே. – தேசிய அரசுப் பேரவை
பா. – பாராளுமன்றம்
பி. அ. – பிரதம அமைச்சர்
தெ – தெரிவு செய்யப்பட்ட
பெ. – பெயர் குறிக்கப்பட்ட
நி – நியமிக்கப்பட்ட
தே. மா. – தேர்தல் மாவட்டம்
தே. ப. – தேசியப் பட்டியல்

* இலங்கை (அரசியலமைப்பு) அரச கட்டளைச்சபை 1946 பிரிவு 8 மற்றும் 74.
\# 1946ன் தொகுதி நிர்ணய ஆணைக்குழு
\+ 1959ன் தொகுதி நிர்ணய ஆணைக்குழு
** 1972ன் அரசியலமைப்பு – பிரிவு 42
\++ 1976ன் தொகுதி நிர்ணய ஆணைக்குழு
*** 1978ன் அரசியலமைப்பு உறுப்புரை 62 (1) மற்றும் – 98 (1)
\+++ 1978ன் அரசியலமைப்பு உறுப்புரை 62 (1) மற்றும் 99எ (14 ஆவது திருத்தம்)

செனேற் சபை 1971, ஒக்ரோபர் 2 ஆந் திகதி ஒழிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மக்கட்தொகை
## (1946 - 1994)

| ஆண்டு | மொத்த மக்கட் தொகை | பிரசைகள் (இலங்கை) | பிரசைகள் அல்லாதோர் |
|---|---|---|---|
| 1946 | 6,657,339 | - | 376,715 * |
| 1953 | 8,097,895 | 7,078,317 | 1,019,578 |
| 1958 (நடுஆண்டு) | 9,404,000 | - | - |
| 1963 | 10,582,064 | 9,569,883 | 1,012,181 |
| 1971 | 12,689,897 | 11,589,050 | 1,100,847 |
| 1981 | 14,846,750 | 14,211,600 | 635,150 |
| 1994 (நடுஆண்டு) | 17,865,000 | - | - |

\+ வெளிநாட்டில் பிறந்த மக்கட்தொகை - இலங்கைக்கு வெளியில் பிறந்தவர்கள் எனப் பதிவு செய்யப்பட்டவர்கள்.

ஆதாரம் : குடிமதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக் குழுக்கள்

## 1946

1946 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ், 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்தனுப்புமுகமாகத் தேர்தல் தொகுதிகளை நிர்ணயஞ் செய்வதற்கெனத் திரு எல். எம். டி. த சில்வா தலைமையில் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக் குழுவொன்று 1946. 05. 23 ஆம் தேதி நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை 1946 ஆம் ஆண்டின் கூட்டத் தொடர் அறிக்கை XIII ஆக வெளியிடப்பட்டது. 84 தனி உறுப்பினர் தொகுதிகளையும் ஒவ்வொன்றும் இரு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் அம்பலாங்கொடை - பலப்பிட்டிய, பதுளை, பலாங்கொடை, கடுகண்ணாவை ஆகிய நான்கு தொகுதிகளையும் மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கொழும்பு மத்தி தேர்தல் தொகுதியையும் இக்குழு விதந்துரைத்தது. ஒவ்வொரு மாகாணத்திற்குமான உறுப்பினர் எண்ணிக்கையானது 1946 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படியான 75,000 பேர் கொண்ட மக்கள் தொகை அலகொன்றிற்கு ஒரு தொகுதி என்ற அடிப்படையிலும் அம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு 1000 சதுர மைலுக்கும் ஒரு மேலதிகத் தொகுதி என்னும் வீதத்திலான அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டது. தேர்தல் மாவட்டங்கள், 1946. 08.30 ஆம் தேதிய 9595 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

## 1953

1953.11.21 ஆம் திகதி தேர்தல் மாவட்டங்களைத் திருத்தியமைப்பதற்கான தொகுதி நிர்ணய ஆணைக்குழுவொன்று திரு. ஆர்த்தர் விஜயவர்தன தலைமையில் நியமிக்கப்பட்டதெனினும் இவ்வாணைக்குழுவின் பணிகள், 1954 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை அரசியலமைப்பு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் முடிவுறுத்தப்படடது.

## 1959

1959.02.19 ஆம் தேதிய வர்த்தமானியில் 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரைக்குமான குடிசன மதிப்பீடு வெளியிடப்பட்டதன் பின்னர் திரு. வோல்ட்டர் தலகொடபிட்டியவின் தலைமையில் 1959.02.21 ஆம் தேதி தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் அறிக்கை, 1959 ஆம் ஆண்டின் கூட்டத்தொடர் அறிக்கை XV ஆக வெளியிடப்பட்டது. 145 தேர்தல் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவென உறுப்பினர் எண்ணிக்கையானது 151 ஆக அதிகரிக்கப்பட்டது. அக்குறண, மட்டக்களப்பு, மூதூர், கொழும்பு தெற்கு ஆகிய தொகுதிகள் ஒவ்வொன்றும் இவ்விரு உறுப்பினர்களையும் கொழும்பு மத்தி மூன்று உறுப்பினர்களையும் தெரிவு செய்யும் தேர்தல் தொகுதிகளாகின. ஒவ்வொரு மாகாணத்திற்குமான உறுப்பினர் எண்ணிக்கையானது, 1958 ஆம் ஆண்டின் நடுப்பகுதியின் சனத்தொகை மதிப்பீட்டின் படியமைந்த 75000 பேர் கொண்ட மக்கள் தொகை அலகொன்றிற்கு ஒரு தொகுதி என்னும் அடிப்படையிலும் அம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு 1000 சதுர மைலுக்கும் ஒரு மேலதிக தொகுதி என்னும் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டது. 1959.06.24 ஆம் தேதிய 11,781 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் புதிய தேர்தல் மாவட்டங்கள் வெளியிடப்பட்டன.

## 1976

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 77ஆம் பிரிவின் கீழ் திரு. நோயல் தித்தவெல்லவின் தலைமையில் தேர்தல் தொகுதிகளைத் திருத்தியமைப்பதற்கான தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவொன்று 1974 – 08 – 09 ஆம் தேதி நியமிக்கப்பட்டது. 1975 பெப்ரவரி 11ஆம் தேதி பிரதிநிதித்துவ அடிப்படையை, தேர்தல் தொகுதி ஒன்றிற்கு 75,000 பேர் என்பதிலிருந்து 90,000 பேராக மாற்றுமுகமாக தேசிய அரசுப் பேரவையானது அரசியலமைப்பிற்கான முதலாவது திருத்தத்தை நிறைவேற்றி அதனை 1974.08.08 லிருந்து நடைமுறைக்கு வருமாறு செய்தது. இதனடிப்படையில் 1971 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படியும் ஒரு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு 1000 சதுரமைலுக்கும் ஒரு மேலதிக தேர்தல் மாவட்டம் என்னும் அடிப்படையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாட்டுக்குழு தனது அறிக்கையை 1976.05.25ஆம் தேதி சமர்ப்பித்தது. இவ்வறிக்கையானது 1976ஆம் ஆண்டின் கூட்டத் தொடர் அறிக்கை 1 ஆக வெளியிடப்பட்டது. 160 தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 168 உறுப்பினர்களாக உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு, பேருவளை, ஹாரிஸ்பத்துவ, பொத்துவில் ஆகிய தொகுதிகள் ஒவ்வொன்றும் இவ்விரு உறுப்பினர்களையும் கொழும்பு மத்தி, நுவரெலியா – மஸ்கெலியா ஆகிய ஒவ்வொன்றும் மும்மூன்று உறுப்பினர்களையும் தெரிவு செய்யும் தொகுதிகளாகவும் ஆகின. புதிய தேர்தல் மாவட்டங்கள் 1976. 05.25 ஆம் தேதிய 24/ 8 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

## 1978

பாராளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கை 196 ஆக 1978ஆம் அரசியலமைப்பினால் கூட்டப்பட்டது. இந்த 196ல் 36 ஆசனங்கள் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் சமமாக ஒதுக்கப்பட்டன. மிகுதி 160 ஆசனங்களும் ஒவ்வொரு தேர்தலின் போதும், அத்தேர்தலில் பயன்படுத்தப்படும் தேர்தல் பதிவேட்டின் படி, தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் மீளப் பகிர்ந்தளிக்கப்படும். அரசியலமைப்பின் 95ஆம் உறுப்புரையின் கீழ் ஒரு தொகுதி நிர்ணய ஆணைக்குழு திரு. ஜீ. பீ. ஏ. சில்வா தலைமையில் தேர்தல் மாவட்டங்களை வகுத்து 96 (4) வாசகத்தின்படி ஒன்பது மாகாணங்களுக்கிடையில் முப்பத்தாறு ஆசனங்களையும் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்காக, 1978.11.29ஆம் தேதியன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 1981ஆம் ஆண்டின் கூட்டத்தொடர் அறிக்கை 1 என வெளியிடப்பட்டது. இந்த ஆணைக்குழு இந்நாட்டை 22 தேர்தல் மாவட்டங்களாக வகுத்துள்ளது. இந்தத் தேர்தல் மாவட்டங்களில் இருபத்தொன்று இப்போதுள்ள நிருவாக மாவட்டங்களுடன் பொருந்துகின்றன. ஆனால் வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னார், வவுனியா, மற்றும் முல்லைத்தீவு நிருவாக மாவட்டங்கள் அடங்குகின்றன. புதிய தேர்தல் மாவட்டகளும் 36 ஆசனங்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதும் 15.01.1981 திகதியைக்கொண்ட 123/3ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

## 1988

அரசியலமைப்பின் 96அ என்ற உறுப்புரையின் கீழ், திரு. ஹீவி ரொட்றிக்கோ அவர்களின் தலைமையில், மற்றொரு தொகுதி நிர்ணய ஆணைக்குழு, 20க்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் மாவட்டங்களை மூன்றுக்கு மேற்படாத வலயங்களாகவும் 10க்கு மேற்பட்ட ஆனால் 20க்குக் குறைந்த உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் மாவட்டங்களை இரண்டுக்கு மேற்படாத வலயங்களாகவும் பிரிப்பதற்காக 1988.06.02 ஆந் தேதியன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 1988ஆம் ஆண்டின் கூட்டத்தொடர் அறிக்கை 15 என வெளியிடப்பட்டது. 1986ஆம் ஆண்டின் தேர்தல் பதிவேட்டின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தை மூன்று வலயங்களாகவும் கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருணாகல் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு வலயங்களாகவும் இந்த ஆணைக்குழு பிரித்தது. இவ்வாறு இந்தத் தேர்தல் மாவட்டங்கள் வலயங்களாகப் பிரிக்கப்பட்டமைபற்றி 27.07.1988 திகதியைக் கொண்ட 516/8ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் சனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த அறிவித்தல் அரசியலமைப்பின் உறுப்புரை 96 அ, பதினைந்தாம் திருத்தத்தினால் நீக்கப்பட்ட பொழுது பயனற்றதாகிவிட்டது. (அரசியலமைப்புக்கான பதினைந்தாம் திருத்தம் 17.12.1988ல் அத்தாட்சிப்படுத்தப்பட்டது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***1946, 1959, 1976 ஆம் ஆண்டுகளின் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுக்களினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒவ்வொரு மாகாணத்தி லுமிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை***

| | 1946 | 1959 | 1976 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை | (89) | (145) | (160) |
| மேல் மாகாணம் | 20 | 35 | 39 |
| மத்திய மாகாணம் | 15 | 23 | 24 |
| தென் மாகாணம் | 12 | 19 | 21 |
| கிழக்கு மாகாணம் | 07 | 11 | 12 |
| வட மாகாணம் | 09 | 13 | 14 |
| வடமேல் மாகாணம் | 10 | 16 | 19 |
| வடமத்திய மாகாணம் | 05 | 08 | 10 |
| ஊவா மாகாணம் | 07 | 10 | 12 |
| சபரகமுவ மாகாணம் | 10 | 16 | 17 |
| | 95 | 151 | 168 |
| 1946 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் 11 (2), 74 ஆம் பிரிவுகளின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் | 6 | 6 | – |
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 101 | 157 | 168 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**1989 இலும் 1994 இலும் தேர்தல் மாவட்ட அடிப்படையில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை**

| தேர்தல் மாவட்டப் பெயர் | | பொதுத் தேர்தல் | |
|---|---|---|---|
| | | பெப்ரவரி 1989 | ஆகஸ்ட் 1994 |
| 1 | கொழும்பு | 20 | 20 |
| 2 | கம்பஹா | 17 | 18 |
| 3 | களுத்துறை | 11 | 10 |
| 4 | கண்டி | 12 | 12 |
| 5 | மாத்தளை | 5 | 5 |
| 6 | நுவரெலியா | 6 | 8 |
| 7 | காலி | 11 | 10 |
| 8 | மாத்தறை | 9 | 8 |
| 9 | அம்பாந்தோட்டை | 7 | 7 |
| 10 | யாழ்ப்பாணம் | 11 | 10 |
| 11 | வன்னி | 5 | 6 |
| 12 | மட்டக்களப்பு | 5 | 5 |
| 13 | திகாமடுல்ல | 6 | 6 |
| 14 | திருகோணமலை | 4 | 4 |
| 15 | குருணாகல | 15 | 15 |
| 16 | புத்தளம் | 7 | 7 |
| 17 | அனுராதபுரம் | 8 | 8 |
| 18 | பொலன்னறுவை | 5 | 5 |
| 19 | பதுளை | 7 | 8 |
| 20 | மொனராகலை | 5 | 5 |
| 21 | இரத்தினபுரி | 10 | 10 |
| 22 | கேகாலை | 9 | 9 |
| | | 196 | 196 |
| தேசிய பட்டியல் மூலமான கௌரவ உறுப்பினர்கள் 1978 அரசியலமைப்பு உறுப்புரை 99ஏ யின் கீழ் | | 29 | 29 |
| | | **225** | **225** |

*1978 அரசியலமைப்பின் 98ஆம் உறுப்புரையின் (4), (5), (6), (7), ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒவ்வோர் தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை, தேருநர்களின் பதிவேடுகள் சான்றுப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் உறுதிப்படுத்துவார்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூலம் : சர்வஜன வாக்குரிமை 1931 – 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு, காலி முகத்திலமைந்துள்ள பழைய பாராளுமன்றக் கட்டிடம்



கொழும்புக் கோட்டை, காலி முகத்திலுள்ள பழைய பாராளுமன்றக் கட்டிடம் 1930 சனவரி 29ஆம் திகதி, அப்பொழுது –'சிலோன்' என வழங்கப்பட்ட இலங்கையின் சட்ட சபையைத் தாபிப்பதற்காக, சேர் ஹேர்பேட் ஸ்டான்லி என்ற தேசாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது சட்ட சபை என அழைக்கப்பட்ட சட்டமன்றம் பின்னர், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தம் காரணமாக, அரசாங்க சபை (1931 – 1947) எனவும், பிரதிநிதிகள் சபை (1947 – 1972) எனவும், தேசிய அரசுப் பேரவை (1972 – 1978) எனவும் வழங்கப்படலாயிற்று. இப்பொழுது வழக்கிலிருக்கும் அரசியலமைப்பு 1978, செப்ரெம்பர் 07ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப் பட்டதும் இந்தச் சட்டமன்றம் "பாராளுமன்றம்" என அழைக்கப்படலாயிற்று.

இந்தப் பழைய பாராளுமன்றக் கட்டிடம் ஐந்து கட்டிடக்கலை மாதிரிகளில் ஒன்றாகிய அயோனிய பாணியில் கட்டப்பட்டதாகும். இது தோற்றத்தில், அதேனி என்ற கிரேக்கப் போர் தெய்வத்திற்கு எதென்சிலுள்ள அக்றப்பொலிஸ் என்ற குன்றின் மேல் கட்டப்பட்ட தலைமைக் கோவிலாகிய பார்தினன் என்பதன் மாதிரியில் அமைந்துள்ளது.

இக்கட்டிடத்தில் சட்ட சபை முதலில் அமைந்தபொழுது மண்டபத்தில் 49 உறுப்பினர்க்கு ஆசன வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1947ஆம் ஆண்டில் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்ததைத் தொடர்ந்து இக்கட்டிட அமைப்பில் முதன்முதல் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. பிரதிநிதிகள் சபை உறுப்பினரின் எண்ணிக்கை பின்னர் 157 ஆகக் கூட்டப்பட்டு 1972 வரை அந்த எண்ணிக்கை நிலையாகவிருந்தது. 1972ஆம் ஆண்டில் தேசிய அரசுப் பேரவையைக் கொண்டு வந்த குடியரசு அரசியலமைப்பு உறுப்பினர் எண்ணிக்கையை 168 ஆகக் கூட்டியது. பெரிய பிரித்தானியாவின் பொது மக்கள் சபையில், வரலாற்றுக் காரணிகளின் பொருட்டு, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சபாமண்டபத்துள் ஆசனம் ஒதுக்கப்படுவதில்லை. ஆனால் இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவே சபாமண்டபத்தின் அமைப்பு முறையிலும் மாற்றங்கள் செய்ய வேண்டியதாயிற்று. அரசாங்கக் கட்சியினர்க்கும் எதிர்க்கட்சியின் முதல் வரிசையிலுள்ளவர்களுக்கும் மாத்திரம் மேசை வசதிகள் வழங்கப்பட்டன. மேசை விளக்குகள் அகற்றப்பட்டு, மறைந்துள்ள ஒளிகாலும் "பகல்ஒளி" குழாய்கள் மூலம் சபாமண்டபத்துள் ஒளியேற்றப்பட்டது. ஒலியைப் பெருக்குவதற்கு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டன. இதனால் சபாமண்டபத்தின் தளத்திலும் கலரிகளிலும் சொற்பொழிவுகள் முன்னரிலும் பார்க்க நன்கு கேட்கக் கூடியனவாயிருந்தன. பிரதான வாயிற் கதவுக்கு இருமருங்கிலுமிருந்த பத்திரிகையாளர் இருக்கைகள் சபாநாயகரின் தவிசிற்கு மேலுள்ள கலரிக்கு மாற்றப்பட்டன. தொடக்கத்திலிருந்தே பொது மக்களுக்கென கலரியில் ஏறத்தாழ 200 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும், பத்திரிகையாளரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருக்கைகள் மாற்றியமைக்கப்பட்டமையினாலும் உரைபெயர்ப்பாளர் கூடங்கள் அமைக்கப்பட்டமையினாலும் இந்த ஆசனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதாயிற்று.

பாராளுமன்றக் கட்டிடத்தின் மேல் பிரபல்யமாகவிருந்த பிரித்தானிய அரச சின்னத்திற்குப் பதிலாக இலங்கை அதிகாரச் சின்னம் வைக்கப்பட்டது. சபா மண்டபத்துள் பாராளுமன்ற உறுப்பினர்க்கு தேசாதிபதி உரையாற்றும் வழக்கம் சோல்பரி அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும் முடிவுற்றது. உறுப்பினர்களுக்குக் கடைசியாக உரையாற்றிய குடியேற்ற நாட்டுத் தேசாதிபதி சேர் ஹென்றி மொங் மேசன் மூர் ஆவார். அதன்பின் மகாதேசாதிபதி சபைக்கூடத்திலேயே உறுப்பினர்க்கு உரையாற்றினார். முதல் இலங்கை மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்க ஆவார். கடைசியாக திரு வில்லியம் கொபல்லாவ மகாதேசாதிபதியாயிருந்தார்.

சபாநாயகர் தவிசும் செங்கோலும் பெரிய பிரித்தானியாவின் மக்கள் சபையின் அன்பளிப்பாகும்; இவை 1949ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. காலப்போக்கில் பல்வேறு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கண்ட பழைய பாராளுமன்றக் கட்டிடம் விரிவுபடுத்தப்படாவிடினும், பிரதம அமைச்சர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்காகிய அலுவலகங்களும், பெண் உறுப்பினர் மாத்திரம் பயன்படுத்துவதற்காகிய ஒரு தனி அறையும் அக்கட்டிடத்தில் ஒதுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கை காலப் போக்கில் அதிகரிக்கவே போதிய இடமும் மற்றும் துணை வசதிகளும் அடங்கிய ஒரு புதிய பாராளுமன்றக் கட்டிடம் அவசியம் தேவைப்படலாயிற்று. இதனாலேயே ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டே பாராளுமன்றத் தொகுதி அதனிடத்தை நிறைவு செய்தது.

பழைய பாராளுமன்றக் கட்டிடத்தில் நடந்த இறுதிக் கூட்டம் 1982 மார்ச் 26ஆந் தேதியாகும். இக் கூட்டத்திற்குச் சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் தலைமை வகித்தார். இக்கட்டிடத்தில் இப்பொழுது சனாதிபதியின் செயலகம் இயங்கிவருகிறது.

## செனேற் சபை



பாராளுமன்றத்தின் மேற்சபையாகிய செனேற் சபை சோல்பரி அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டது. முன்னர் இலங்கையின் சட்டசபை இருந்த இடத்திலேயே செனேற் சபை தாபிக்கப்பட்டது. இக்கட்டிடம் சேர் ஆதர் ஹமில்டன் கோடனால் 1883, திசெம்பர் 06ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது.

பிரித்தானிய நிருவாகம் கொழும்பில் ஒரு சிறு பகுதியில், கொழும்புக் கோட்டையை முகப்பாகவும், ஐரோப்பிய நிருவாகத்தின் உயிர் நாடியாகிய துறைமுகத்தை உள்ளடக்கியதாகவும் விளங்கியது. நிருவாகத்தின் தலைமை அலுவலகமாகிய "இராணி மாளிகை" துறைமுகத்தை அடுத்திருந்தது. தேசாதிபதி இலகுவாகச் செல்வதற்கு வசதியாக, சட்டமன்றம் இராணிமாளிகைக்கு முன்னுள்ள வீதியைக் கடந்தவுடன் அமைந்திருந்தது. இப்பொழுது சனாதிபதி மாளிகையாக விளங்கும் இராணி மாளிகைக்கு வடக்காகவும், செனேற் கட்டிடத்திற்கு மேற்காகவும், தேசாதிபதிகளின் தனிப்பட்ட, "கோடன் பூங்கா" என ஒரு தேசாதிபதியின் பெயரிடப்பட்ட பூங்கா அப்பொழுதிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செனேற் சபையில் முப்பது உறுப்பினர் இருந்தனர். இவர்களில் பாதிப்பேர் பிரதிநிதிகள் சபையாகிய கீழ்ச் சபையினால் தெரிவு செய்யப்பட்டனர். எஞ்சிய பாதிப்பேர் நியமிக்கப்பட்டனர். இது ஒரு அறிவுரை கூறும் சபையாகவே விளங்கியது. பல்கலை, சட்டம், மருத்துவம் மற்றும் பல்வேறு முக்கிய துறைகளைச் சார்ந்த அரசியல் சாராத தலைவர்கள் தம் நுண்மதியை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த அது சந்தர்ப்பம் அளிப்பதாகவிருந்தது.

செனேற் சபை இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் பிரயோசனமான பங்களிப்பைச் செய்து வந்தது. திருமதி சிறிமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்கா அவர்களே செனேற் சபையிலிருந்து மதிப்பார்ந்த பிரதமராக அமர்ந்த முதற் செனேற் சபை உறுப்பினர். (1960 – 1965); உலகில் முதல் பெண் பிரதம அமைச்சராகியவரும் இவரே. இதன் பின்னரே செனேற் சபை பொது மக்களின் கவனத்தை ஈர்த்தது.

1972ஆம் ஆண்டின் புதிய குடியரசு அரசியலமைப்புப் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன், செனேற் சபை, 1971ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும்) (திருத்தச்) சட்டத்தின் கீழ், 1971 ஒக்ரோபர் 02 ஆந் திகதி ஒழிக்கப்பட்டது.

செனேற் சபையின் இறுதி அமர்வு 1971 செப்ரெம்பர் 23ஆந் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு செனேற் சபைத் தலைவராயிருந்த கௌரவ ஏ. இரத்நாயக்க தலைமை வகித்தார். செனேற் சபை அமைந்திருந்த அக்கட்டிடத்தில் இப்பொழுது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இயங்கிவருகிறது.

## புதிய பாராளுமன்றக் கட்டிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே



ஒரு காலத்தில் இலங்கையின் தலைநகராக விளங்கிய ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டேயில், அமைந்துள்ள புதிய பாராளுமன்றக் கட்டிடம் 1982 ஏப்றில் 29ஆந் திகதி, மேன்மை தங்கிய சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடம் கொழும்பிலிருந்து ஏறத்தாழப் பத்து மைல் தூரத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க தியவன்ன ஓயாவினால் சூழப்பட்டுள்ள பன்னிரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. இதன் கட்டிடக் கலைஞர் திரு. ஜியொவ்றி பாவா ஆவார். இக்கட்டிடத்திற்கான வேலைகள் 1979 நவம்பர் மாதம் தொடங்கப்பட்டன. புகழ்பெற்ற இலங்கை ஓவியர்களும், சிற்பிகளும் தங்கள், கைத்திறனையும் அறிவையும் பயன்படுத்தி நாட்டின் பல்வேறு கலை, சிற்ப வண்ணங்களை இக்கட்டிடத்தில் வரைந்து காட்டியுள்ளனர்.

1980 செப்ரெம்பர் 22ஆந் திகதி, கட்டிடத்தின் மூன்றில் ஒரு பங்கு வேலை முடிந்த வேளை, நவரத்தினங்கள் இடும் வைபவம் நடைபெற்றது. இது இலங்கையில் நடைபெறும் ஒரு பாரம்பரியக் கிரியையாகும். இது புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்தின் அத்திவாரத்துள் ஒன்பது வகையான இரத்தினக் கற்களையும் வேறு சில திரவியங்களையும் இட்டு, சம்பந்தப்பட்ட பணி நேரத்துடனும் இடுக்கண் இன்றியும் நிறைவேற தெய்வ அருள் வேண்டிச் செய்யப்படும் ஒரு கிரியையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றக் கட்டிடம் அமைந்துள்ள இடம் ஒரு தீவு ஆகையினால், அத்திவாரம் இடும்போது விசேட முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கட்டிட அமைப்பு முழுவதும் பெரிதும் மீள வலுப்படுத்தப்பட்ட கொங்கிறீற்றுத் தூண்களிலே தங்கியுள்ளது. மிகச்சிறந்த உருக்கும், தேக்கும் கூரையிற் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூறு தொன் செப்புத் தகடுகளால் கூரை வேயப்பட்டுள்ளது. பெருமளவான கட்டிடப் பொருட்கள் யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. நாற்காலி, மேசை போன்ற தளபாடங்கள் யாவும் இலங்கையில் பெயர்பெற்ற தளபாடத் தயாரிப்பாளர்களால் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

முதல் மாடியை அடைவதற்கு வட பாகத்திலிருந்து பல தொடர்ப்படிகள் மூலமும் அங்கிருந்து சரிந்து செல்லும் தளவரிசை கொண்ட பாகத்தின் மூலமும் செல்லுதல் வேண்டும். அங்கே, மறைந்திருக்கும் நீர்இறைக்கும் எந்திரத்தினால் அலங்காரமான நீர்நிலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நீர் படிகளிலிருந்து கீழ் நோக்கி அருவிபோன்று வடிந்து செல்லும். நடைவழி பல தூண்களையுடையதும் கட்டிடத்தின் முன் பக்கம் முழுவதையும் தழுவி நடைவழிக்குச் செங்குத்தாகவுள்ளதுமான தாழ்வாரத்திற்குச் செல்கிறது. தாழ்வாரத்தில் இரு பெரும் அலங்கார காண்டாமணிகள் தொங்குகின்றன. தாழ்வாரத்தின் உட்கூரை, வர்ண ஓட்டு வடிவங்களால் வரையப்பட்டுள்ளது. தொடர் படிகள் மேல் நோக்கிச் சென்று முடியுமிடத்தில் சபா மண்டபத்தின் பிரதான வாயிற்கதவு அழகிய வேலைப்பாடுகளுடன் எடுப்பாகத் தோற்றமளிக்கிறது. இது செம்பினால் செய்யப்பட்டு வெள்ளியினால் மென் பூச்சிடப்பட்டுள்ளது. இக்கதவில் புராதன கற்பாறைகளில் காணப்படும் கல்வெட்டுப் பாணியில் இலங்கை அரசியலமைப்பின் பாயிரம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கதவின் கரையோரத்தில் கவர்ச்சியான தாமரைப்பூ மற்றும் கலை வடிவங்கள், புராதன இலங்கைக் கலைகளைப் பிரதிபலிக்கும் வகையில், காணப்படுகின்றன. கதவின் பின்புறத்தில் ஒரு பூ வடிவம், பிரித்தானிய அரும்பொருட்சாலையிலுள்ள புராதனகால இலங்கை விதானத்திற் காணப்படுவது போன்று வரையப்பட்டுள்ளது.

சபா மண்டபம் இரு மாடிகளின் உயரத்தைக் கொண்டுள்ளது. ஒன்றுடனொன்று இணைந்தனவும் ஒரு சதுர அடி பரப்பளவுள்ளனவும் அலுமினியப் பூச்சுக் காப்பிடப் பட்டனவுமான 20,000 தட்டங்களைக் கொண்ட ஒரு சிறந்த உட்கூரை மேற்கூரை முழுவதையும் மூடியுள்ளது. அரசர்களினதும், கோவில்கள் மற்றும் கோறளைகளினதும் பட்டுக் கொடிகள், விருதுகள், பதாகைகள் என்பன பதினெட்டு கறையற்ற உருக்குக் கம்பங்களில் அலங்காரமாகக் காட்சியளிக்கின்றன. இவற்றுடன் ஏழு அடி உயரமான இலங்கைச் சின்னமும் சேர்ந்து சபா மண்டபத்து மேல் அகல் வட்டத்தில் மிகுந்த பகட்டாகத் தென்படுகின்றன. எனினும் காய்ச்சிவடித்த செம்பினாலாக்கப்பட்டு வெள்ளி முலாம் பூசப்பட்ட அற்புதமான மிகப் பெரிய தொங்கும் சர விளக்கு இவை யாவற்றிலும் பார்க்கச் சிறந்த கைவேலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இது தொங்கு உட்கூரையின் மத்தியிலிருந்து நேராக கீழ்நோக்கித் தொங்கி நிற்கின்றது. இவை கீழைத்தேய கைவண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன. சபாமண்டபத்தின் தளம் முழுவதையும் மூடியுள்ள மென்மையான செங்கம்பளம் அழுகுக்கு அழகு ஊட்டி ஒரு சிறந்த அமைதிச் சூழலை ஏற்படுத்துகிறது. எனவே, இப்பாராளுமன்றத்தின் கருமங்கள் யாவும் கலைவேலைப்பாட்டுடன் கூடிய ஒரு சூழலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாராளுமன்றம் 1982, ஏப்றில் மாதம் இப்புதிய கட்டிடத்திற்கு இடம்பெயர்ந்த பொழுது, இதன் உறுப்பினர் எண்ணிக்கை 168 ஆகவிருந்தது. ஆயினும் சபா மண்டபத்துள் 200 உறுப்பினர் அமரக்கூடிய இட வசதியிருந்தது. 1989, பெப்ரவரி 15ஆந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாவட்ட மட்டத்திலும் தேசிய பட்டியல் மூலமும் 225 உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு வந்தனர். 32 மேலதிக உறுப்பினருக்காகிய இடவசதி மண்டப அமைப்பில் மாற்றம் செய்யாமலே ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொழுது 225 உறுப்பினர் இருந்தபொழுதிலும் 232 ஆசனங்கள் சபா மண்டபத்துள் உண்டு.

சபாமண்டபத்தின் மேல் பாகத்தில் 600 பேர் வரையிலான பொதுமக்கள் அமரக்கூடிய "கலரி" உண்டு. சபாநாயகரின் தவிசுக்கு எதிர்ப் பக்கத்தில் சபாநாயகரின் கலரி அமைந்துள்ளது. இந்தக் கலரி சிறப்புரிமை பெற்ற பார்வையாளருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளருக்கு சபாநாயகரின் தவிசுக்கு மேலுள்ள கலரியில் இடமளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர், சபாநாயகர் கலரியிலிருக்கும் பார்வையாளர், பத்திரிகையாளர் ஆகியோருக்காக சபா மண்டபத்தில் நடைபெறும் உரைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் சமகால உரை பெயர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றக் கட்டிடம் அமைந்துள்ள நிலப்பரப்பு ஏறத்தாழ 48,000 சதுர மீற்றர்களாகும். அதற்குப் பக்கத்திலுள்ள சிறு கட்டிடங்கள் ஒரு கோளைச் சுற்றியுள்ள செய்மதிகள் போன்று காட்சியளிக்கின்றன.

சனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு தளபாடங்களுடன் கூடிய அறைகளுண்டு. இவர்கள் சபை நடவடிக்கைகளைக் கவனிக்கக்கூடியதாக அந்த அறைகளில் வர்ணத் தொலைக்காட்சிக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. படிக்கட்டுகளும், முகம்பார்க்கும் கண்ணாடிகளுடன் கூடிய மின் தூக்கிகளும் தளங்கள் ஒன்றுடன் ஒன்றை இணைக்கின்றன. குழுக்கள் கூடுவதற்காகிய அறைகள், வரவேற்புக் கூடங்கள், உண்டிச்சாலைகள், புத்தகங்கள் நிறையவுள்ள பெரியதொரு நூல்நிலையம், வங்கி, அஞ்சல் அலுவலகம் முதலிய பல்வேறு வசதிகள் இப்பாராளுமன்றக் கட்டிடத்திலுண்டு. பாராளுமன்றக் கட்டிடம் கொழும்புக் கோட்டையிலுள்ள காலிமுகத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டேக்கு இடம்பெயர்ந்ததுடன் வரலாற்று ஏடுகள் பின்னோக்கிச் சென்று இந்த மீயுயர் நிறுவனம் இலங்கையின் பெருமைமிக்க புராதன இராசதானிக்கே மீண்டும் வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றக் கூட்டத்தொடர்களின் காலநீட்சி

## முதற் பாராளுமன்றம் - பிரதிநிதிகள் சபை

(14 ஒக்ரோபர் 1947 - 08 ஏப்றில் 1952)

வேட்பு மனுத்தாக்கல் : 26 ஜூலை 1947

பொதுத் தேர்தல் : ஆகஸ்ட் 23, 25, 26, 27, 28, 30, செப்ரெம்பர் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20 ( 19 நாட்கள்)

முதலாவது கூட்டத்தொடர்
- முதற் கூட்டம் : 14 ஒக்ரோபர் 1947
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 25 நவம்பர் 1947
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 31 ஜனவரி 1948

இரண்டாவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 10 பெப்ரவரி 1948
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 17 ஜூன் 1949

மூன்றாவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 12 ஜூலை 1949
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 06 ஏப்றில் 1951

நான்காவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 20 ஜூன் 1950
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 24 ஏப்றில் 1951

ஐந்தாவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 20 ஜூன் 1951
- பாராளுமன்றம் கலைக்கப்பட்டது : 08 ஏப்றில் 1952

**காலநீட்சி : 04 வருடம் 05 மாதம் 25 நாட்கள்**

## இரண்டாம் பாராளுமன்றம் - பிரதிநிதிகள் சபை

(09 ஜூன் 1952 - 18 பெப்ரவரி 1956)

வேட்பு மனுத்தாக்கல் : 28 ஏப்றில் 1952

பொதுத் தேர்தல் : 1952 மே 24, 26, 28, 30, ( 04 நாட்கள்)

முதலாவது கூட்டத்தொடர்
- முதற் கூட்டம் : 09 ஜூன் 1952
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 10 ஜூன் 1952
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 29 ஏப்றில் 1953

இரண்டாவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 07 ஜூலை 1953
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 31 மார்ச் 1954

மூன்றாவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 12 ஏப்றில் 1954
- கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 27 ஏப்றில் 1955

நான்காவது கூட்டத்தொடர்
- கூட்டத்தொடர் ஆரம்பம் : 07 ஜூன் 1955
- பாராளுமன்றம் கலைக்கப்பட்டது : 18 பெப்ரவரி 1956

**காலநீட்சி : 03 வருடம் 08 மாதம் 10 நாட்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் பாராளுமன்றம் – பிரதிநிதிகள் சபை
(19 ஏப்றில் 1956 – 05 டிசெம்பர் 1959)

வேட்பு மனுத்தாக்கல் : 08 மார்ச் 1956
பொதுத் தேர்தல் : 1956 ஏப்றில் 5, 7, 10, ( 03 நாட்கள்)

முதலாவது கூட்டத்தொடர்
முதற் கூட்டம் : 19 ஏப்றில் 1956
கூட்டத்தொடர் ஆரம்பம் : 20 ஏப்றில் 1956
கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 03 மே 1957

இரண்டாவது கூட்டத்தொடர்
கூட்டத்தொடர் ஆரம்பம் : 13 ஜூன் 1957
கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 15 மே 1958

மூன்றாவது கூட்டத்தொடர்
கூட்டத்தொடர் ஆரம்பம் : 04 ஜூன் 1958
கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 23 மே 1959

மூன்றாவது கூட்டத்தொடர் தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட திகதி 1958 ஜூன் 12, எனினும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டிருந்தமையால் 1958 ஜூன் 04 ஆம் தேதியே பாராளுமன்றம் கூடுமாறு அழைக்கப்பட்டது.

நான்காவது கூட்டத்தொடர்
கூட்டத்தொடர் ஆரம்பம் : 30 ஜூன் 1959
பாராளுமன்றம் கலைக்கப்பட்டது : 05 டிசெம்பர் 1959

**காலநீட்சி : 03 வருடம் 07 மாதம் 17 நாட்கள்**

## நான்காவது பாராளுமன்றம் – பிரதிநிதிகள் சபை
(30 மார்ச் 1960 – 23 ஏப்றில் 1960)

வேட்பு மனுத்தாக்கல் : 04 ஜனவரி 1960
பொதுத் தேர்தல் : 19 மார்ச் 1960 ( 01 நாள்)

முதலாவது கூட்டத்தொடர்
முதற் கூட்டம் : 03 மார்ச் 1960
கூட்டத்தொடர் ஆரம்பம் : 06 ஏப்றில் 1960
பாராளுமன்றம் கலைக்கப்பட்டது : 23 ஏப்றில் 1960

**காலநீட்சி : 36 நாட்கள்**

## ஐந்தாம் பாராளுமன்றம் – பிரதிநிதிகள் சபை
(05 ஆகஸ்ட் 1960 – 17 டிசெம்பர் 1964)

வேட்பு மனுத்தாக்கல் : 20 மே 1960
பொதுத் தேர்தல் : 20 ஜூலை 1960

முதலாவது கூட்டத்தொடர்
முதற் கூட்டம் : 05 ஆகஸ்ட் 1960
கூட்டத்தொடர் ஆரம்பம் : 12 ஆகஸ்ட் 1960
கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 04 ஜூலை 1961

இரண்டாவது கூட்டத்தொடர்
கூட்டத்தொடர் ஆரம்பம் : 13 ஜூலை 1961
கூட்டத்தொடர் ஒத்திவைப்பு : 20 ஜூன் 1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 11 ஜூலை 1962 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 06 மே 1963 |

நான்காவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 17 ஜூலை 1963 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 12 மார்ச் 1964 |

ஐந்தாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 02 ஜூலை 1964 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 12 நவம்பர் 1964 |

ஆறாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 20 நவம்பர் 1964 |
| பாராளுமன்றம் கலைக்கப்பட்டது | : | 17 டிசெம்பர் 1964 (14259 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) |

**காலநீட்சி : 04 வருடம் 04 மாதம் 13 நாட்கள்**

## ஆறாவது பாராளுமன்றம் – பிரதிநிதிகள் சபை

**(05 ஏப்றில் 1965 – 25 மார்ச் 1970)**

| | | |
|---|---|---|
| வேட்பு மனுத்தாக்கல் | : | 11 ஜனவரி 1965 |
| பொதுத் தேர்தல் | : | 22 மார்ச் 1965 |

முதலாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| முதற் கூட்டம் | : | 05 ஏப்றில் 1965 |
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 09 ஏப்றில் 1965 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 22 ஜூன் 1966 |

இரண்டாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 08 ஜூலை 1966 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 20 ஜூன் 1967 |

மூன்றாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 08 ஜூலை 1967 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 22 ஜூன் 1968 |

நான்காவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 07 ஜூலை 1968 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 25 ஜூன் 1969 |

ஐந்தாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 10 ஜூலை 1969 |
| பாராளுமன்றம் கலைக்கப்பட்டது | : | 25 மார்ச் 1970 (வர்த்தமானி இல.14898/7) |

**காலநீட்சி : 05 வருடம் 03 நாட்கள்**

## ஏழாவது பாராளுமன்றம் – பிரதிநிதிகள் சபை

**(07 ஜூன் 1970 – 22 மே 1972)**

| | | |
|---|---|---|
| வேட்பு மனுத்தாக்கல் | : | 23 ஏப்றில் 1970 |
| பொதுத் தேர்தல் | : | 27 மே 1970 |

முதலாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| முதற் கூட்டம் | : | 07 ஜூன் 1970 |
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 14 ஜூன் 1970 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 23 மார்ச் 1971 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 28 மார்ச் 1971 |
| பாராளுமன்றம் முடிவுறுதல் | : | 22 மே 1972 |

1972 மே 22 ஆம் தேதி இலங்கையின் அரசியலமைப்புப் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்குப் பதிலாக தேசிய அரசுப் பேரவை தோன்றியது.

**காலநீட்சி : 01 வருடம் 11 மாதம் 25 நாட்கள்**

## முதலாவது தேசிய அரசுப் பேரவை

(22 மே 1972 – 18 மே 1977)

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 22 மே 1972 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 10 பெப்ரவரி 1977 |
| பாராளுமன்றம் கலைக்கப்பட்டது | : | 18 மே 1977 (வர்த்தமானி இல. 265/8) |

**காலநீட்சி : 04 வருடம் 11 மாதம் 26 நாட்கள்**

## இரண்டாவது தேசிய அரசுப் பேரவை

(04 ஆகஸ்ட் 1977 – 07 செப்ரெம்பர் 1978)

| | | |
|---|---|---|
| வேட்புமனுத் தாக்கல் | : | 06 ஜூன் 1977 |
| பொதுத் தேர்தல் | : | 21 ஜூலை 1977 |
| முதற் கூட்டம் | : | 04 ஆகஸ்ட் 1977 |
| தேசிய அரசுப் பேரவை முடிவுறுதல் | : | 07 செப்ரெம்பர் 1978 |

இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டம் 1977 ஆகஸ்ட் 26 ஆம் தேதி கூட நிர்ணயிக்கப்பட்டிருந்ததெனினும், ஜூலைப் பொதுத்தேர்தலின் பின்னர் புதிய பிரதம அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜெயவர்தன தேசிய அரசுப் பேரவையை 1977 ஆகஸ்ட் 04 ஆம் திகதி கூடுவதற்கு அழைக்குமாறு சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கினார். (1977. 07. 28ஆந் திகதிய 275/15 ஆம் இலக்க வர்த்தமானி)

**கால நீட்சி : 01 வருடம் 01 மாதம் 16 நாட்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 1978 செப்ரெம்பர் 7 ஆந் தேதி பிரகடனப்படுத்தப்பட, இரண்டாவது தேசிய அரசுப் பேரவைக்குப் பதிலாகப் பாராளுமன்றம் தோன்றியது.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது பாராளுமன்றம் (07 செப். 1978 – 20 டிசெ. 1988)

முதலாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| முதற் கூட்டம் | : | 07 செப்ரெம்பர் 1978 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 26 மார்ச் 1982 |

இரண்டாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 29 ஏப்றில் 1982 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 07 ஜனவரி 1983 |

மூன்றாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 09 பெப்ரவரி 1983 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 19 ஜனவரி 1984 |

நான்காவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 23 பெப்ரவரி 1984 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 25 ஜனவரி 1985 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 20 பெப்ரவரி 1985 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 31 ஜனவரி 1986 |

ஆறாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 20 பெப்ரவரி |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 27 ஜனவரி. 1987 *(1987.01.27 ஆம் தேதிய 438/2 ஆம் இலக்க வர்த்தமானி)* |

ஏழாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 19 பெப். 1987 *(1987.01.27 ஆம் தேதிய 438/ 2 ஆம் இலக்க வர்த்தமானி)* |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 22 ஜனவரி 1988 *(1988.01.22 ஆம் தேதிய 489/38 ஆம் இலக்க வர்த்தமானி)* |

எட்டாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 25 பெப்ரவரி 1988 *(1988.01.22 ஆம் தேதிய 489/ 38 ஆம் இலக்க வர்த்தமானி)* |
| பாராளுமன்றம் கலைக்கப்பட்டது | : | 20 டிசெம்பர் 1988 *(1988.12.20 ஆம் தேதிய 537/ 2 ஆம் இலக்க வர்த்தமானி)* |

1982 டிசெம்பர் 22 ஆம் தேதி நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பிற்கான நான்காவது திருத்தத்தின் மூலம் முதலாவது பாராளுமன்றத்தின் காலம் 1989 ஆகஸ்ட் 04 ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டிருந்ததெனினும், 1988 டிசெம்பர் 20 ஆம் தேதி அதாவது இரண்டாவது சனாதிபதித் தேர்தலுக்கு அடுத்த தினம் கலைக்கப்பட்டது.

**காலநீட்சி : 10 வருடம் 03 மாதம் 13 நாட்கள்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இரண்டாவது பாராளுமன்றம் (09 மார்ச் 1989 – 24 ஜூன் 1994)

| | | |
|---|---|---|
| வேட்பு மனுத்தாக்கல் | : | 06 ஜனவரி 1989 *(1988.12.20 ஆம் தேதிய 537/ 2 ஆம் இலக்க வர்த்தமானி)* |
| பொது தேர்தல் | : | 15 பெப்ரவரி 1989 (அதே) |

முதலாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| முதற் கூட்டம் | : | 09 மார்ச் 1989 |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 23 மார்ச் 1990 *(1990 – 03–23 ஆம் தேதிய 602/ 21 ஆம் இலக்க வர்த்தமானி)* |

இரண்டாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 04 ஏப்றில் 1990 *(1990.03.23 ஆம் தேதிய 602/ 22 ஆம் இலக்க வர்த்தமானி)* |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 21 மார்ச் 1991 *(1991.03.21 ஆம் தேதிய 654/ 13 ஆம் இலக்க வர்த்தமானி)* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 19 ஏப்றில் 1991 (1991.03.21 ஆம் தேதிய 654/ 14 ஆம் இலக்க வர்த்தமானி) |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 30 ஆகஸ்ட் 1991 (1991.08.30 ஆம் தேதிய 677/15 ஆம் இலக்க வர்த்தமானி) |

நான்காவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 24 செப்ரெம்பர் 1991 (1991.08.30 ஆம் தேதிய 677/ 16 ஆம் இலக்க வர்த்தமானி) |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 23 மார்ச் 1993 (1993.03.23 ஆம் தேதிய 759/ 5 ஆம் இலக்க வர்த்தமானி) |

ஐந்தாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 22 ஏப்றில் 1993 (1993.03.23 ஆம் தேதிய 759/ 5 ஆம் இலக்க வர்த்தமானி) |
| பாராளுமன்றம் கலைக்கப்பட்டது | : | 24 ஜூன் 1994 (1994.06.24 ஆம் தேதிய 824/ 18 ஆம் இலக்க வர்த்தமானி) |

**காலநீட்சி : 05 வருடம் 04 மாதம் 07 நாட்கள்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூன்றாவது பாராளுமன்றம் (23 ஆகஸ்ட் 1994 –)

| | | |
|---|---|---|
| வேட்பு மனுத்தாக்கல் | : | 11 ஜூலை 1994 (1994.06. 24 ஆம் தேதிய 824 / 18 ஆம் இலக்க வர்த்தமானி) |
| பொது தேர்தல் | : | 16 ஆகஸ்ட் 1994 (அதே) |

முதலாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| முதற் கூட்டம் | : | 25 ஆகஸ்ட் 1994 ( 1994.08.24 ஆம் தேதிய 833 / 9 ஆம் இலக்க வர்த்தமானி) |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 15 டிசெம்பர் 1994 (1994.12.15 ஆம் தேதிய 849/16 ஆம் இலக்க வர்த்தமானி) |

இரண்டாவது கூட்டத்தொடர்


| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 06 ஜனவரி 1995 (1994.12.15 ஆம் தேதிய 849/ 16 ஆம் இலக்க வர்த்தமானி) |
| கூட்டத்தொடர் ஒத்திவைப்பு | : | 12 ஜனவரி 1996 (1996.01.12 ஆம் தேதிய 905/ 15 ஆம் இலக்க வர்த்தமானி) |

மூன்றாவது கூட்டத்தொடர்

| | | |
|---|---|---|
| கூட்டத்தொடர் ஆரம்பம் | : | 09 பெப்ரவரி 1996 (1996.01.12 ஆம் தேதிய 905/ 16 ஆம் இலக்க வர்த்தமானி) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பாராளுமன்றத்தினதும்
பாராளுமன்ற அமர்வு நாட்கள்
1998 பெப்ரவரி 4ஆந் திகதியன்றுள்ளவாறு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை (1948 - 1997)

| ஆண்டு | சட்டங்களின் எண்ணிக்கை | ஆண்டு | சட்டங்களின் எண்ணிக்கை | ஆண்டு | சட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1948 | 29 | 1965 | 19 | 1982 | 52 |
| 1949 | 59 | 1966 | 38 | 1983 | 54 |
| 1950 | 43 | 1967 | 18 | 1984 | 48 |
| 1951 | 42 | 1968 | 52 | 1985 | 56 |
| 1952 | 45 | 1969 | 38 | 1986 | 45 |
| 1953 | 51 | 1970 | 36 | 1987 | 51 |
| 1954 | 54 | 1971 | 57 | 1988 | 84 |
| 1955 | 38 | 1972 | 38 | 1989 | 18 |
| 1956 | 55 | 1973 | 55 | 1990 | 48 |
| 1957 | 62 | 1974 | 42 | 1991 | 53 |
| 1958 | 51 | 1975 | 50 | 1992 | 71 |
| 1959 | 26 | 1976 | 37 | 1993 | 63 |
| 1960 | 6 | 1977 | 25 | 1994 | 26 |
| 1961 | 72 | 1978 | 62 | 1995 | 37 |
| 1962 | 35 | 1979 | 71 | 1996 | 38 |
| 1963 | 12 | 1980 | 62 | 1997 | 38 |
| 1964 | 44 | 1981 | 78 | | |

## ஒவ்வொரு பாராளுமன்றத்தினாலும் ஆக்கப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| முதலாவது பாராளுமன்றம் | (14.10.1947 - 08.04.1952) | 193 |
| இரண்டாவது பாராளுமன்றம் | (09.06.1952 - 18.02.1956) | 198 |
| மூன்றாவது பாராளுமன்றம் | (19.04.1956 - 05.12.1959) | 164 |
| நான்காவது பாராளுமன்றம் | (30.03.1960 - 23.04.1960) | |
| ஐந்தாவது பாராளுமன்றம் | (05.08.1960 - 17.12.1964) | 169 |
| ஆறாவது பாராளுமன்றம் | (05.04.1965 - 25.03.1970) | 188 |
| ஏழாவது பாராளுமன்றம் | (07.06.1970 - 18.05.1977) | 300 |
| எட்டாவது பாராளுமன்றம் | (04.08.1977 - 20.12.1988) | 680 |
| ஒன்பதாவது பாராளுமன்றம் | (09.03.1989 - 24.06.1994) | 271 |
| பத்தாவது பாராளுமன்றம் | (25.08.1994 முதல் இன்றுவரை) | 121 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுத் தலைவர்களினால் பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகள்

| பெயரும் பதவியும் | உரையாற்றிய தேதி |
|---|---|
| 1. பண்டிட் ஜவகர்லால் நேரு<br>*(இந்தியாவின் பிரதம அமைச்சர்)* | *13 ஒக்ரோபர் 1962* |
| 2. பீல்ட் மார்ஷல் மொகமட் அயூப்கான்<br>*(பாகிஸ்தான் சனாதிபதி)* | *09 டிசெம்பர் 1963* |
| 3. திருமதி இந்திரா காந்தி<br>*(இந்தியாவின் பிரதம அமைச்சர்)* | *28 ஏப்ரில் 1973* |
| 4. சுல்பிகார் அலி பூட்டோ<br>*(பாகிஸ்தான் சனாதிபதி)* | *16 டிசெம்பர் 1975* |
| 5. மொரார்ஜி தேசாய்<br>*(இந்தியாவின் பிரதம அமைச்சர்)* | *06 பெப்ரவரி 1979* |
| 6. திருமதி மார்கரெட் தட்சர்<br>*(பிரித்தானிய பிரதம அமைச்சர்)* | *13 ஏப்ரில் 1985* |

(சீனப் பிரதம அமைச்சர் சூ என் லாய் 1957 பெப்ரவரி 1 ஆம் தேதி பிரதிநிதிகள் சபைக்கு வருகை தந்து பாராளுமன்றச் சபை மண்டபத்திலும் தங்கு கூடத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களை உத்தியோகப் பற்றற்ற முறையில் சந்தித்தார்)

* இலங்கைக்கு வருகை தந்த இரண்டு பாகிஸ்தான் சனாதிபதிகளும் மூன்று இந்தியப் பிரதம அமைச்சர்களும் கொழும்பிலிருந்த பாராளுமன்றக் கட்டிடத்தின் சபைக் கூடத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றும் வாய்ப்பினைப் பெற்றனர். இத்தருணத்தில் உறுப்பினர்கள் பாராளுமன்றமாகக் கூடியிருக்கவில்லை.

** இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிமுறை வரலாற்றில் முதன்முறையாக இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானிய பிரதம அமைச்சர் திருமதி மார்கரெட் தட்சர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலமைந்துள்ள பாராளுமன்ற சபா மண்டபத்தில் சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்ந்திருக்கவும் செங்கோல் சபாபீடத்திலிருக்கவும் பாராளுமன்றமாகக் கூடியிருந்த உறுப்பினர்களுக்கு உரையாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்கள் (1947 - 1998)

***1947***

23.08.1947 – குடியேற்ற நாட்டு ஆட்சியின் பின் முதலாவது பொதுத்தேர்தல்

24.09.1947 – அதி கௌரவ டீ. எஸ். சேனநாயக்க இலங்கையின் முதல் பிரதம அமைச்சரானார்.

14.10.1947 – பிரதிநிதிகள் சபையின் முதலாவது கூட்டம்

11.11.1947 – இலங்கைக்கு முழுச் சுதந்திரம் வழங்குவதற்காகிய உடன்படிக்கை இலங்கைக்கும் இங்கிலாந்துக்குமிடையில் கையொப்பமிடப்பட்டது.

12.11.1947 – செனேற் சபையின் முதற் கூட்டம் நடைபெற்றது.

03.12.1947 – சுதந்திரப் பிரேரணை சனப் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

***1948***

04.02.1948 – இலங்கை ஒரு சுதந்திர நாடாகியது.
தேசாதிபதி சேர் ஹென்றி மொங்க் – மேசன் மூர் இலங்கையின் முதலாவது மகாதேசாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

10.02.1948 – பாராளுமன்றத்தைச் சடங்கு முறையில் டொறிங்டன் கூடல் மண்டபத்தில் குளோசெஸ்டர் கோமகன் திறந்து வைத்தார்.

28.07.1948 – பாராளுமன்ற அவையில் முதன்முறையாக இரண்டு சிங்களச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

20.08.1948 – பிரசா உரிமைச் சட்டமூலம் சனப் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

03.09.1948 – திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

***1949***

11.01.1949 – பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் குழு, பிரதிநிதிகள் சபைச் சபாநாயகரின் தவிசையும் மேலங்கியையும் ( செங்கோல்) வழங்கியமை.

21.01.1949 – இந்திய பாகிஸ்தானிய குடியிருப்பாளர் ( பிரசா உரிமை) சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டமை.

16.03.1949 – முதல் தமிழ்ச் சொற்பொழிவு பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்தப்பட்டமை.

06.07.1949 – சோல்பரி பிரபு இலங்கையின் இரண்டாவது மகாதேசாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

29.08.1949 – கௌரவ டி. எஸ். சேனநாயக்க கல்ஓயாத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

20.09.1949 – அமைச்சர் ஒருவருக்கு (திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்) எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்குப் பிரதம அமைச்சர் மறுத்தமையினால் அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

19.12.1949 – சமஷ்டிக் கட்சி தொடங்கப்பட்டது.

***1950***

09.01.1950 – பொதுநலவாய வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாடு அதி கௌரவ டீ. எஸ். சேனநாயக்க தலைமையில் தொடங்கியது. நிதி அமைச்சர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன சமர்ப்பித்த ஒரு திட்டத்தின்படி கொழும்புத் திட்டம் 1951ல் தொடக்கப்பட்டது.

01.02.1950 }
02.02.1950 } – பொதுநலவாய வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாட்டில் பங்குபற்றியதற்கு எதிராக அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை – பிரேரணை தோல்வியுற்றது.

14.02.1950 }
15.02.1950 } – வாழ்க்கைச் செலவு கூடுவதைக் கட்டுப்படுத்தத் தவறியமை காரணமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.07.1950 } – தென்னைக் கைத்தொழில் சம்பந்தமான கொள்கை பற்றி அரசாங்கம் மீது
19.07.1950 கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியடைந்தது.

29.08.1950 – அரசாங்க சேவையிலிருந்த திருப்தியீனம் காரணமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டபொழுது தோல்வியுற்றது.

## *1951*

02.03.1951 – தேசியக் கொடி சம்பந்தமான குழுவின் அறிக்கையைப் பிரதிநிதிகள் சபை ஏற்றுக்கொண்டது.

12.07.1951 – திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகினார்.

02.08.1951 – யப்பானுடனான சமாதான ஒப்பந்தத்தின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. இது பிரதிநிதிகள் சபையில் 23.08.1951ல் விவாதிக்கப்பட்டது. இச்சட்ட மூலம் 29.02.1952ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02.09.1951 – சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உருவாகியது.

22.11.1951 – அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் அரசாங்க அமைப்பைக் கட்சி நலனுக்காகப் பிரயோகித்தல் ஆகியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

– தேசிய கீதம் அமைச்சரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## *1952*

21.03.1952 – அதி கௌரவ டீ. எஸ். சேனநாயக்க குதிரையிலிருந்து விழுந்து அடுத்த நாள் இறந்து விட்டார்.

26.03.1952 – கௌரவ டட்லி சேனநாயக்க இலங்கையின் பிரதம அமைச்சராக நியமிக்கப் பட்டார்.

24.05.1952 – பொதுத்தேர்தல் தொடங்கியது. ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

07.11.1952 – சீன – இலங்கை இறப்பர் – அரிசி உடன்படிக்கை அமைச்சரவையினால் அங்கீரிக்கப்பட்டது.

## *1953*

26.03.1953 – பாராளுமன்ற (அதிகாரங்களும் சிறப்புரிமைகளும்) சட்ட மூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12.08.1953 – அரிசி விலை ஏற்றத்தை எதிர்த்து ஹர்த்தால் நடத்தப்பட்டது.

01.09.1953 – நாட்டில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியமைக்காக அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை எனக் கொண்டுவரப்பட்ட பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியடைந்தது.

12.10.1953 – கௌரவ டட்லி சேனநாயக்க பிரதம அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

– கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல இலங்கையின் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

27.11.1953 – பிரதம அமைச்சர் 24.11.1953ல் வெளியிட்ட கொள்கை சம்பந்தமான அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

## *1954*

18.01.1954 – இலங்கையிலுள்ள இந்தியர் சம்பந்தமாகப் புதுடில்லியில் கொத்தலாவல நேரு உடன்படிக்கை

13.02.1954 – இந்திய – இலங்கை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது.

01.03.1954 – சேர் ஜோன் கொத்தலாவல, பிரதம அமைச்சர், இந்திய – இலங்கை உடன்படிக்கை சம்பந்தமாக ஓர் உரை நிகழ்த்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.04.1954 – இரண்டாம் பாராளுமன்றத்தின் மூன்றாம் அமர்வை 2ம் எலிசபெத் மகாராணி திறந்து வைத்தார்.

28.04.1954 – ஆசிய பிரதம அமைச்சர்களின் மகாநாடு சேர். ஜோன் கொத்தலாவலயின் தலைமையில் கொழும்பில் தொடக்கி வைக்கப்பட்டது.

11.06.1954 – பிரதம அமைச்சரின் நடத்தை சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

17.07.1954 – சேர் ஒலிவர் குணத்திலக இலங்கையராகிய முதல் மகாதேசாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்தார்.

## 1955

15.03.1955 – பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டமை பற்றி அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

27.04.1955 – ஆபிரிக்க – ஆசிய மகாநாட்டில் பிரதம அமைச்சர் காட்டிய மனப்பான்மை பற்றி அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

02.12.1955 – பாராளுமன்றத்தின் "போலி அமர்வு" சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட விடயம் சிறப்புரிமைச் சட்டத்தின் 3ம் 4ம் பிரிவுகளின் கீழ் வருவதனால் பாராளுமன்ற உறுப்பினரின் நடத்தை பற்றி உயர் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பமுடியாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

14.12.1955 – இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் உறுப்பினராக ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1956

13.01.1956 – திரு. டட்லி சேனநாயக்க பாராளுமன்றத்திலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் விலகினார்.

22.02.1956 – 'மக்கள் ஐக்கிய முன்னணி' என்ற கட்சி தொடங்கப்பட்டது.

05.04.1956 – பொதுத்தேர்தல் தொடங்கியது. மக்கள் ஐக்கிய முன்னணி அதிகாரத்துக்கு வந்தது.

12.04.1956 – திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க இலங்கையின் பிரதம அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

17.05.1956 – மரண தண்டனை நிறுத்திவைத்தல் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

31.05.1956 – செனேற் சபை, மரண தண்டனை நிறுத்தி வைத்தல் என்ற சட்டமூலத்தை, முதன்முறையாகத் தள்ளுபடி செய்தது.

05.06.1956 – சமஷ்டிக் கட்சி காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தது.

14.06.1956 – அரச கரும மொழிச் சட்டமூலம் (சிங்களம் மாத்திரம் சட்டம்) பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

01.11.1956 – மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக செனேற் சபைக்கு ஒரு செங்கோலை அன்பளிப்புச் செய்தார்.

18.12.1956 – பிள்ளைகளைத் தத்தெடுத்தல் (திருத்த) சட்ட மூலத்தை செனேற் சபை தள்ளுபடி செய்தது.

– பிரதம அமைச்சர் தான் மேற்கு நாடுகளுக்குச் சென்றமை சம்பந்தமாக 11.12.1956ல் வெளியிட்ட உரைபற்றிப் பிரதிநிதிகள் சபையில் விவாதம் நடைபெற்றது.

## 1957

19.01.1957 – மோட்டார் வாகனங்களுக்கு ஸ்ரீ இலக்கம் இடுவதற்கு எதிரான இயக்கம் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் தொடங்கப்பட்டது.

25.04.1957 – பிரதேச சபைகள், தமிழ்மொழி பயன்படுத்துதல், அடிப்படை உரிமைகள் முதலியனபற்றிப் பிரதம அமைச்சர் வெளியிட்ட உரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.05.1957 – பிரதேச சபைகள் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

15.10.1957 – திருகோணமலையிலிருந்த கடற்படை, விமானப்படைத் தளங்கள் இலங்கைக்குப் பிரித்தானியாவினால் கையளிக்கப்பட்டன.

30.10.1957 – செனேற் சபையில் சிங்களத்தில் சொற்பொழிவாற்ற அனுமதிக்கப்பட்டது.

01.11.1957 – கட்டுநாயக்க விமானத் தளம் இலங்கைக்குப் பிரித்தானியாவால் கையளிக்கப்பட்டது.

08.11.1957 – பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை பிரதிநிதிகள் சபையில் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

26.11.1957 – அரசியல் யாப்பைத் திருத்தியமைப்பதற்கெனப் பிரதிநிதிகள் சபையினதும் செனேற் சபையினதும் கூட்டுத்தெரிகுழு ஒன்றை நியமிப்பதற்குப் பிரதிநிதிகள் சபை உடன்பட்டது.

18.12.1957 – கொழும்பு மாநகர சபையைக் கலைத்தமை சம்பந்தமாக அரசாங்கம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

19.12.1957 – இலங்கைக்கும் ஐக்கிய சோசலிச சோவியத்து இரசியாவுக்குமிடையில் இராசதந்திர உறவுகள் தொடக்கப்பட்டன.

– நெற் காணிகள் சட்டம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது.

## *1958*

01.01.1958 – இலங்கையிலுள்ள பஸ்வண்டிச் சேவைகள் தேசியமயமாக்கப்பட்டன.

07.03.1958 – தேசிய சேமலாப நிதிச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது.

09.04.1958 – பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையைப் பிரதம அமைச்சர் மீளப் பெற்றுக் கொண்டார்.

25.04.1958 – அரசியல் யாப்புத் திருத்தியமைத்தல் பற்றிய கூட்டுத் தெரிகுழுவின் அறிக்கை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை செனேற் சபையில் 06.05.1958ல் சமர்ப்பிக்கப்பட்டது.

24.05.1958 – இந்நாட்டில் இனவாதக் கலவரங்கள் வெடித்தன.

27.05.1958 – அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது. சமஷ்டிக்கட்சியும் தேசிய விடுதலை முன்னணியும் தடைசெய்யப்பட்டன.

01.08.1958 – கொழும்பு கப்பற்றுறை தேசிய மயமாக்கப்பட்டது.

05.08.1958 – தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

10.09.1958 – தேசிய மயமாகிய சேவைகள் மற்றும் வீதிப் போக்குவரத்து அமைச்சு உருவாக்கப்பட்டது.

20.11.1958 – அவசரகால நிலைமை முதலியவற்றை முடிவுறுத்தத் தவறியமைக்காக அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

17.12.1958 – அரசியல் யாப்புத் திருத்தியமைத்தல் பற்றிய கூட்டுத்தெரிகுழுவின் அறிக்கை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இது செனேற் சபையில் 30.12.1958ல் சமர்ப்பிக்கப்பட்டது.

## *1959*

18.05.1959 – கமத் தொழில் அமைச்சர் கௌரவ பிலிப் குணவர்தன கைத்தொழில் அமைச்சர் கௌரவ பீ. எச். வில்லியம் சில்வா ஆகியோர் பதவிகளிலிருந்து விலகினர்.

11.06.1959 – நீதி அமைச்சர் திரு. எம். டபிள்யு. எச். த சில்வா அரசாங்கத்திலிருந்தும் செனேற் சபையிலிருந்தும் விலகினார்.

25.09.1959 – பிரதம அமைச்சர் திரு எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க அவருடைய இல்லத்தில் சுடப்பட்டார்.

26.09.1959 – கௌரவ பிரதம அமைச்சரின் மரணம்.

– கௌரவ டபிள்யு. தஹநாயக்க இலங்கையின் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.10.1959 – நன்னெறியைப் பின்பற்றி இந்நாட்டை ஆட்சி செய்யாத அரசாங்கத்தில் நம்பிக்கையில்லை என்ற பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியுற்றது.

24.11.1959 – மரண தண்டனைச் சட்டத்தை நிறுத்தி வைப்பதை நீக்குதல் பற்றிய சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

08.12.1959 – பிரதம அமைச்சர் கௌரவ காலநிதி டபிள்யு. தஹநாயக்க ஐந்து அமைச்சர்களையும் ஒரு பாராளுமன்றச் செயலாளரையும் அவர்கள் பதவிகளிலிருந்து நீக்கினார்.

## 1960

06.01.1960 – பிரதம அமைச்சர் கௌரவ கலாநிதி தஹநாயக்க, எஞ்சியிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களைக் காபந்து அரசாங்கத்திலிருந்து நீக்கினார்.

19.03.1960 – பொதுத்தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

21.03.1960 – திரு. டட்லி சேனநாயக்க இலங்கையின் பிரதம அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

22.04.1960 – ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், நன்றி தெரிவித்தற் பிரேரணைக்கு எதிர்க்கட்சி கொண்டுவந்த திருத்தத்தின் மூலம் பிரதிநிதிகள் சபையில் தோற்கடிக்கப்பட்டது.

20.07.1960 – பொதுத்தேர்தல் இடம்பெற்றது. சிறீ லங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

21.07.1960 – திருமதி சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க உலகின் முதல் பெண் பிரதம அமைச்சரானார்.

02.08.1960 – கௌரவ சிறிமா பண்டாரநாயக்க செனேற்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

28.10.1960 – உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

15.12.1960 – காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21.12.1960 – இலஞ்ச ஆணைக்குழு அறிக்கை (தல்கொடபிட்டிய) பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது.

30.12.1960 – நீதிமன்ற மொழிச் சட்ட மூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1961

03.01.1961 – செனேற் சபை அலுவல்கள் சிங்கள மொழியில் நடத்தப்படலாயின.

18.01.1961 – பிரதிநிதிகள் சபை அலுவல்கள் சிங்கள மொழியில் நடத்தப்படலாயின.

05.05.1961 – இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16.05.1961 – மக்கள் வங்கிச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1962

13.02.1962 – நிதி அமைச்சரும் பிரதம அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளருமான கௌரவ பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க 27.01.1962ல் தோல்வியுற்ற இராணுவப் புரட்சிபற்றிப் பிரதிநிதிகள் சபையில் உரை நிகழ்த்தினார்.

02.03.1962 – திரு. வில்லியம் கோபல்லாவ இலங்கையின் நாலாவது மகாதேசாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

25.08.1962 – கௌரவ பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க வரவு செலவுத் திட்ட யோசனைகள் தொடர்பில் தன் பதவியிலிருந்து விலகினார்.

## 1963

05.04.1963 – இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழான பிரமாணங்கள் பிரதிநிதிகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

01.08.1963 – சிங்கள மொழியில் முதலாவது வரவு செலவுத் திட்ட உரையை கௌரவ ரி. பீ. இலங்கரத்ன ஆற்றினார்.

12.08.1963 – ஐக்கிய இடதுசாரி முன்னணி (எம்.ஈ.பீ; எல்.எஸ்.எஸ்.பீ; சீ.பீ) உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1964

11.06.1964 – இலங்கை சம சமாஜக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்தது.

01.10.1964 – இலங்கை பத்திரிகைகள் சட்டமூலம் செனேற் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

06.10.1964 – சபாநாயகர் திரு. ஹியூ பர்னாந்து பத்திரிகைகள் சட்டமூலம் சம்பந்தமாக ஒரு தீர்ப்பை வழங்கினார். இச்சட்ட மூலத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டது; இவர், சட்டமூலம் 1965, பெப்ரவரி 2ம் திகதி கொண்டுவரப்படும் எனச் சபையின் செயலதிபருக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்.

15.10.1964 – இலங்கைப் பத்திரிகைக் கூட்டுத்தாபனச் சட்டமூலம் ("அசோசியேற்றெட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்" தாபனத்தைப் பொறுப்பெடுப்பதற்கு) பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

29.10.1964 – இந்திய வம்சாவழி நாடற்ற மக்கள் சம்பந்தமான சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கை புதுடில்லியில் கையொப்பமிடப்பட்டது.

03.12.1964 – நன்றி தெரிவித்தற் பிரேரணைக்கு எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த திருத்தத்தின் விளைவாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டு அரசாங்கம் பிரதிநிதிகள் சபையில் தோல்வியுற்றது. சபை முதல்வரும் காணி, நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி அமைச்சருமான திரு. சீ. பீ. த சில்வா உட்பட 14 அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தனர்.

## 1965

22.03.1965 – பொதுத்தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

24.03.1965 – டட்லி – செல்வநாயகம் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது.

25.03.1965 – திரு. டல்லி சேனநாயக்க நான்காவது தடவையாகப் பிரதம அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

21.10.1965 – குடியியல் தகவின்மை விதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18.11.1965 – இலங்கைப் பெற்றோலியம் (வெளிநாட்டு உரிமைகள் கோரிக்கை) நட்டஈடு சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

## 1966

01.01.1966 – ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக நோன்மதி நாளும் சனிக்கிழமைக்குப் பதிலாக நோன்மதி முந்நாளும் அரசாங்க விடுமுறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

08.01.1966 – தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான பிரமாணங்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவருவதற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது; வண. தம்பராவே ரத்தினசார தேரர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

09.03.1966 – இராசாங்க அமைச்சர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன 1966, பெப்ரவரி அரசியல் புரட்சி பற்றிப் பிரதிநிதிகள் சபையில் ஓர் உரை ஆற்றினார்.

27.08.1966 – உயர்கல்விச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24.09.1966 – திரு. வீ. எல். பொடியப்புஹாமி அல்லது தொடம்பே முதலாளி என்பவரின் மரணம் தொடர்பாக அரசாங்கம் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை, 'விடயம் நீதிமன்றில்' இருப்பதனால் ஏற்றுக்கொள்ளமுடியாது எனச் சபாநாயகர் தீர்ப்பளித்தார்.

– அரசியல் யாப்பைத் திருத்தியமைப்பதற்கென ஒரு கூட்டுத் தெரிகுழுவை நியமிப்பதற்குப் பிரதிநிதிகள் சபை இணங்கியது.

18.12.1966 – அரிசிப் பங்கீட்டுக்குப் பதிலாக ஒரு கொத்து அரிசி இலவசமாகக் கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1967

04.06.1967 – இந்திய – இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19.06.1967 – அரசியல் யாப்பைத் திருத்தியமைப்பது பற்றிய கூட்டுத் தெரிகுழுவின் அறிக்கை பிரதிநிதிகள் சபையிலும் செனேற் சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

## 1968

08.03.1968 – பிரதம அமைச்சர், கௌரவ டட்லி சேனநாயக்க கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது எனப் பிரதிநிதிகள் சபையில் பகிரங்கமாக அறிவித்தார்.

23.03.1968 – முடிக்குரிய காணியை விசேட குத்தகைக்குக் கொடுத்தமை சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது– பிரேரணை தோல்வியடைந்தது.

07.05.1968 – திரு. ஆர். ரீ. த சில்வா என்பவரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தவிசாளராக மீள நியமித்தமைக்காக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

07.06.1968 – வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்ச் சட்ட மூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

08.06.1968 – மாவட்ட சபைகள் பற்றிய வெள்ளை அறிக்கை சம்பந்தமான விவாதத்தைப் பிரதம அமைச்சர் கௌரவ டட்லி சேனநாயக்க தொடக்கி வைத்தார்.

13.06.1968 – அரசியல் யாப்புத் திருத்தியமைத்தல் பற்றிய கூட்டுத் தெரிகுழுவின் இரண்டாம் அறிக்கை பிரதிநிதிகள் சபையிலும் செனேற் சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

21.07.1968 – பிரதம அமைச்சர் கௌரவ டட்லி சேனநாயக்க, மாவட்ட சபைகள் சட்டமூலம் மக்கள் மீது திணிக்கப்பட மாட்டாது எனப் பிரதிநிதிகள் சபையில் அறிவித்தார்.

16.09.1968 – உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ எம். திருச்செல்வம் தமது பதவியைத் துறந்தார் ; அரசாங்கத்திலிருந்து சமஷ்டிக் கட்சி வெளியேறியது.

## 1969

22.02.1969 – இரண்டாவதாக வந்த இரண்டாவது வேட்பாளர் (திரு. ஜோர்ஜ் கொத்தலாவல) பாராளுமன்ற ஆசனத்துக்கு உரித்துடையவரெனத் தேர்தல் மனு வழக்கொன்றில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 1970

27.05.1970 – பொதுத்தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய முன்னணி அரசு அதிகாரத்துக்கு வந்தது.

30.05.1970 – திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க இரண்டாவது முறையாக பிரதம அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

19.07.1970 – அரசியலமைப்பு நிர்ணய சபைக் கூட்டம் பிரதம அமைச்சர் கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்காவினால் நவரங்கஹலாவில் தொடக்கி வைக்கப்பட்டது.

07.08.1970 – பிரதிநிதிகள் சபை உறுப்பினராக அல்லது செனேற்றராக வருவதற்கான தகுதியீனம் பற்றிய 13 (3) (ஊ) பிரிவைத் திருத்துவதற்காகிய அரசியலமைப்பு (திருத்த) சட்டமூலத்தை செனேற்சபை தள்ளுபடி செய்தது.

25.10.1970 – ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதல் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 100/–, ரூபா 50/– ஆகிய தாள் நாணயங்கள் செல்லுபடியற்றனவாக்கப்பட்டன.

## 1971

05.04.1971 – மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி தொடங்கியது.

21.05.1971 – செனேற் சபையை ஒழிப்பதற்காகிய அரசியலமைப்பு (திருத்த)ச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் இரண்டாம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.07.1971 – பூரணை நாட்களை முழு விடுமுறையாகவும் ஞாயிற்றுக்கிழமைகளை வாரமுடிவு விடுமுறையாகவும் ஏற்பாடு செய்யும் விடுமுறைகள் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02.10.1971 – செனேற் சபையை ஒழிப்பதற்காகிய அரசியலமைப்பு (திருத்த)ச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையின் தொடர்ச்சியான இரண்டு கூட்டத்தொடர்களில் ஏற்கப்பட்ட பின்னர் மகாதேசாதிபதி அங்கீகரித்தார்.

22.10.1971 – இலங்கை மேல் முறையீட்டு நீதிமன்றச் சட்டமூலம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது மேல் முறையீட்டு (பிறிவி கவுன்சில்) கட்டளைச் சட்டத்தைத் தள்ளுபடி செய்தது.

## 1972

03.01.1972 – அரசியலமைப்பு நிர்ணய சபையின் வேலைகளைச் செய்வதற்குப் பதினொரு குழுக்கள் நியமிக்கப்பட்டன.

07.01.1972 – இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டமூலம் பல்வேறு பீடங்களைக் கொண்ட ஒரு தனிப்பல்கலைக் கழகத்தைத் தாபிப்பதற்காக, பிரதிநிதிகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. 1966ம் ஆண்டின் 20ம் இலக்கச் சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது.

05.04.1972 – குற்றவியல் நீதி (விசேட) ஆணைக்குழுச் சட்டம் பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

02.05.1972 – தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதன்மூலம் மக்கள் ஏமாற்றப்பட்டனர் எனக் குற்றம் சாட்டி அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

22.05.1972 – புதிய அரசியலமைப்பு பிரகடனம் செய்யப்பட்டது; இலங்கைக் குடியரசு தாபிக்கப்பட்டதுடன் "சிலோன்" என்பது இலங்கை எனவும் மாற்றப்பட்டது; பிரதிநிதிகள் சபை தேசிய அரசுப் பேரவை என மாற்றம் செய்யப்பட்டது.

18.08.1972 – காணிச் சீர்த்திருத்தச் சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1973

22.02.1973 – இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

07.03.1973 – உணவுப்பொருள் பற்றாக்குறை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, வேலை வாய்ப்பின்மை முதலியனவற்றின் விளைவாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசிய அரசுப் பேரவையில் விவாதிக்கப்பட்டது – பிரேரணை தோல்வியுற்றது.

18.07.1973 – "அசோசியேற்றட் நியூஸ்பேப்பேர்ஸ் ஒவ் சிலோன் லிமிற்றட்" (விசேட ஏற்பாடுகள் சட்டமூலம்) தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

04.10.1973 – உணவுப்பொருள் பற்றாக்குறை, வேலையின்மை, பதவிக்கால நீடிப்பு முதலியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசிய அரசுப் பேரவையில் விவாதிக்கப்பட்டது. பிரேரணை தோல்வியடைந்தது.

24.10.1973 – நீதி நிருவாகச் சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பின்னா 1977ன் 19ம் இலக்கச் சட்டத்தினாலும் 1978ன் 2ம், 1979ன் 15ம் இலக்கச் சட்டங்களினாலும் நீக்கப்பட்டது.

## 1974

01.01.1974 – புதிய நீதி நிருவாகச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

21.02.1974 – பிரதம அமைச்சர் கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க 1974ம் ஆண்டின் இந்திய – இலங்கை உடன்படிக்கை பற்றித் தேசிய அரசுப் பேரவையில் ஓர் அறிக்கை விடுத்தார்.

20.04.1974 – "தவச" தொகுதிப் பத்திரிகைகள் அலுவலகம் மூடி முத்திரையிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.07.1974 – பிரதம அமைச்சர் கௌரவ (திருமதி) சிறீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள வரலாற்றுக் கடல் எல்லை பற்றிய உடன்படிக்கை (கச்சதீவு உடன்படிக்கை) சம்பந்தமாக ஓர் அறிக்கை விடுத்தார்.

## 1975

02.09.1975 – இலங்கைச் சமசமாஜக் கட்சி அமைச்சர்கள் மூவர் – நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா, போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தன ஆகியோர் – பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

03.09.1975 – கலாநிதி என்.எம். பெரேரா, நிதி அமைச்சர் பதவியிலிருந்து தான் நீக்கப்பட்டமைபற்றித் தேசிய அரசுப் பேரவையில் ஓர் அறிக்கை விடுத்தார்.

18.09.1975 – பிரதம அமைச்சர் கௌரவ சிறீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க, அமைச்சரவையிலிருந்து அமைச்சர்கள் மூவரை நீக்கிய சம்பவம் பற்றித் தேசிய அரசுப் பேரவையில் ஓர் அறிக்கை விடுத்தார்.

08.10.1975 – கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா, திரு. லெஸ்லி குணவர்தன ஆகிய இருவரும் தாம் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமை பற்றித் தேசிய அரசுப் பேரவையில் அறிக்கைகள் விடுத்தனர்.

## 1976

06.04.1976 – கடல் எல்லை சம்பந்தமான இந்திய – இலங்கை உடன்படிக்கை, பரிமாறப்பட்ட கடிதங்கள் ஆகியன தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டன.

16.08.1976 – ஐந்தாம் அணிசேரா மகாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

21.12.1976 – பாராளுமன்ற ஒய்வூதியச் சட்டமூலம் தேசிய அரசுப்பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1977

10.02.1977 – தேசிய அரசுப் பேரவை 1977, மே 19ம் திகதிவரை தள்ளிவைக்கப்பட்டது.

19.02.1977 – கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தைவிட்டு நீங்கியது. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், பிரதிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை ஆகியோர் அரசாங்கத்திலிருந்து விலகினர்.

01.03.1987 – கைத்தொழில் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. ரீ.பி. சுபசிங்க அரசாங்கத்திலிருந்து விலகினார்.

18.05.1977 – தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டது.

21.07.1977 – பொதுத்தேர்தல் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்தது.

23.07.1977 – திரு. ஜே. ஆர். ஜயவர்தன இலங்கையின் பிரதம அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

04.10.1977 – தெரிவு செய்யப்பட்ட ஒரு சனாதிபதிக்கு ஏற்பாடு செய்வதற்காக இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் இரண்டாம் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20.10.1977 – அரசியலமைப்பைத் திருத்தியமைப்பதற்காக ஒரு தெரிகுழு நியமிக்கப்பட்டது.

21.10.1977 – குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது.

14.11.1977 – குடிசார் நீதிமன்ற நடவடிக்கைமுறை (விசேட ஏற்பாடு) சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1978

20.01.1978 – பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச்சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

01.02.1978 – பாராளுமன்ற (அதிகாரங்களும், சிறப்புரிமைகளும்)திருத்தச் சட்டமூலம் தேசிய அரசுப்பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02.02.1978 – விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.02.1978 – சிறப்புரிமை மீறப்பட்டமை பற்றிய முறைப்பாட்டின் பேரில் 'சன்டே ஒப்சேர்வர்' பத்திரிகை ஆசிரியரும் துணை ஆசிரியரும் பாராளுமன்றச் சபை மன்றுக்கு அழைக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூபா 1000/– தண்டம் விதிக்கப்பட்டது.

03.02.1978 – கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன தெரிவு செய்யப்பட்ட முதல் சனாதிபதியாகப் பதவியேற்று ஆற்றிவரும் சேவைகளுக்காகத் தேசிய அரசுப் பேரவையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

04.02.1978 – கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன இலங்கைக் குடியரசின் நிறைவேற்று அதிகாரமுடைய முதல் சனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்தார்.

06.02.1978 – கௌரவ ஆர். பிரேமதாச இலங்கையின் பிரதம அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

19.05.1978 – தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மற்றும் அதேபோன்ற அமைப்புக்களைத் தடை செய்யும் சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையில் அங்கீகரிக்கப்பட்டது.

11.08.1978 – உள்ளூராட்சி அதிகார சபைகள் (குடியியற் தகுதியீனங்கள் விதித்தல்) சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன (1978ன் 38 ஆம், 39 ஆம் இலக்கச் சட்டங்கள்)

07.09.1978 – இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புப் பிரகடனம் செய்யப்பட்டது (01.09.1978ன் 332/11 இலக்க வர்த்தமானி) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தாபிக்கப்பட்டது. சட்டசபை, பாராளுமன்றம் என அழைக்கப்படலாயிற்று.

05.10.1978 – நீதித் துறைச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

07.11.1978 – பல்கலைக்கழகங்கள் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972ன் 1ம் இலக்கச் சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது.

## *1979*

23.03.1979 – மட்டக்களப்பு முதலாம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை (தமிழர் விடுதலைக் கூட்டணி) ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார்.

19.07.1979 – பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

04.09.1979 – தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர், 03.07.1979ல் தொடங்கிய பகிஷ்கரிப்பைக் கைவிட்டுப் பாராளுமன்றத்தில் சமுகமளித்தனர்.

03.10.1979 – அத்தியாவசிய அரசாங்க சேவைகள் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21.11.1979 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் கௌரவ எம். டீ. எச். ஜயவர்தன 20.11.1979ல் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது ஆற்றிய உரை காரணமாகத் தன் பதவியிலிருந்து விலகினார்.

## *1980*

25.06.1980 – திரு. எஸ். நடேசன், கியூ. சீ, பாராளுமன்றச் சிறப்புரிமைகள் பற்றி எழுதிய கட்டுரையில் தெரிவித்த கருத்துக்கள் பாராளுமன்றத்தைப் பாதிக்கவில்லை என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

18.07.1980 – பொது வேலை நிறுத்தம்

16.10.1980 – திருமதி சிறீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்காவைப் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் குடியியல் தகவின்மை விதிப்பதற்குமான பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

15.12.1980 – உருக்குக் கூட்டுத்தாபனத் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைச் சபையின் எல்லைக்குள் பயமுறுத்தினார் என்பதற்காக, சபை மன்றின் முன் கொண்டு வரப்பட்டு ரூபா 5000/ = தண்டம் விதிக்கப்பட்டார்.

23.12.1980 – பாராளுமன்றத்தில் கலவானை ஆசனம் சம்பந்தமாகச் சபாநாயகர் 09.12.1980ல் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்க உறுப்பினர் ஒருவர் பிரேரித்தார். பிரேரணை தோல்வியுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1981

04.02.1981 – இலங்கையில் வயதுவந்த யாவர்க்கும் வாக்குரிமை கிடைத்து 50 ஆண்டு நிறைந்தமை பற்றிய கொண்டாட்டங்கள் தொடங்கின.

04.06.1981 – மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் நடைபெற்றன.

04.08.1981 – ஐக்கிய தேசியக் கட்சி மூன்றரை ஆட்சிக் காலத்தில் பிழையான ஆட்சி செய்தமை சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. இது நீதிவிசாரணையிலிருக்கிறது எனக்கூறிச் சபாநாயகர் 05.08.1981 அன்று தீர்ப்பளித்தார்.

23.12.1981 – பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் நெவில் பர்னாந்துவை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டுமென ஒரு தெரிகுழுவின் அறிக்கையின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை, சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி விலகியமையினால் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

21.10.1981 – இலங்கையில் வயதுவந்த யாவர்க்கும் வாக்குரிமை கிடைத்து 50 ஆண்டு நிறைந்தமையைக் கொண்டாடுமுகமாக 22.10.1981 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 2ம் எலிசபெத் மகாராணியாரும் இளவரசர் பிலிப்பும் இலங்கை வந்து சேர்ந்தனர்.

## 1982

26.03.1982 – காலிமுகப் பாராளுமன்றக் கட்டிடத்தில் பாராளுமன்றத்தின் கடைசிக் கூட்டம் நடைபெற்றது.

29.04.1982 – பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

21.07.1982 – ஆகாய விமானத்திற்கு எதிரான குற்றங்கள் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20.10.1982 – முதல் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

22.12.1982 – எட்டாம் பாராளுமன்றத்தின் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளால் நீடிப்பதற்கு மக்கள் கருத்தறி வாக்கெடுப்பு நடைபெற்றது.

## 1983

25.02.1983 – பொத்துவில் முதலாம் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் எம். ஏ. எம். ஜலால்தீனை வெளியேற்றுவதற்கும் குடியியல் தகவின்மையை விதிப்பதற்குமான பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18.05.1983 – 18 பாராளுமன்ற ஆசனங்களுக்கு உப தேர்தல்கள் நடைபெற்றன.

24.07.1983 – இலங்கையில் இன வன்முறைகள் வெடித்தன.

30.07.1983 – இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுனை, நவ லங்கா சம சமாஜக் கட்சி ஆகியன தடை செய்யப்பட்டன; "தினகர' அச்சகமும் முத்திரையிட்டு மூடப்பட்டது.

09.08.1983 – உயர் நீதிமன்றம் முதலியன வழங்கிய தீர்ப்புகளைப் புறக்கணித்தமைக்காக அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை "வழக்கு விசாரணையிலிருக்கிறது" எனக் கூறிச் சபாநாயகர் தீர்ப்பளித்தார்.

24.10.1983 – தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள், அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின்படி வெற்றிடங்களாயின.

21.12.1983 – இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக, நல்லெண்ணப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின.

## 1984

24.03.1984 – தேசிய பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது.

06.04.1984 – பொருளாதாரச்சீரழிவு, சட்டம் தகுந்த முறையிற் செயற்படாமை, குற்றச் செயல்கள் முதலியன அதிகரித்தல் ஆகியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுத் தோல்வியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.04.1984 – திருகோணமலை எண்ணெய்க்குத உடன்படிக்கை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் கையொப்பமிடப்பட்டது.

25.05.1984 – திருகோணமலை எண்ணெய்க்குத உடன்படிக்கை விவாதிக்கப்பட்டது.

26.12.1984 – சர்வ கட்சி மாநாடு யோசனைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்தமையினால் அவை கைவிடப்பட்டன.

## 1985

08.01.1985 – திரு. சிரில் மத்தியூ அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டமைபற்றி, அவர் பாராளுமன்றத்தில் ஓர் அறிக்கை விடுத்தார்.

06.02.1985 – இலங்கையின் தலைநகரமாகிய ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டேயின் எல்லைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. (06.02.1985ன் 335/5 இலக்க வர்த்தமானி)

05.07.1985 – இலங்கைத் தூதுக்குழு இனப்பிரச்சினை சம்பந்தமான சமாதானப் பேச்சு வார்த்தைக்குப் பூட்டான் புறப்பட்டது.

09.08.1985 – இலங்கைத் தூதுக்குழு 12.08.1985ல் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைக்காகப் பூட்டான் புறப்பட்டது.

## 1986

01.01.1986 – திருமதி சிறீமாவோ ஆர்.டீ. பண்டாரநாயக்க, திருவாளர்கள் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க (இறந்தபின்), நிஹால் ஜயவிக்ரம, டொக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன் ஆகியோரின் குடியுரிமைகளை சனாதிபதி ஜயவர்தன மீண்டும் வழங்கினார்.

25.06.1986 – இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, சர்வ கட்சி மகாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

## 1987

06.03.1987 – பகிரங்கக் கூட்டுத் தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுவதற்காகிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

06.03.1987 – அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளைப் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களாக மாற்றுவதற்காகிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02.06.1987 – இந்திய உணவுப் பொருட்கள் விமானத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் போடப்பட்டமை பற்றி அறிவிப்பதற்காகப் பாராளுமன்றத்தின் விசேட கூட்டம் கூட்டப்பட்டது.

09.07.1987 – பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை நிலவுவது பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு தெரிகுழு, எதிர்க்கட்சியினரின் வேண்டுகோளின் பேரில் நியமிக்கப் பட்டது.

29.07.1987 – இந்திய – இலங்கைச் சமாதான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

18.08.1987 – ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கக் குழுக்கூட்டம் பாராளுமன்றக் குழு அறையில் நடைபெற்ற பொழுது எறிகுண்டுத்தாக்குதல் நடைபெற்றது. தெனியாயப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கீர்த்தி அபயவிக்கிரம, சபை முதல்வர் அலுவலக உத்தியோகத்தர் திரு சேனாதீர ஆகியோர் காயமுற்று இறந்தனர்.

25.09.1987 – ரத்கம பாராளுமன்ற உறுப்பினர் திரு. அசோகா சோமரத்ன இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை எதிர்க்கும் முகமாகத் தன் பாராளுமன்ற ஆசனத்தி லிருந்து விலகினார்.

10.11.1987 – கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் உணவு அமைச்சர் கௌரவ காமினி ஜயசூரிய இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்தை எதிர்க்குமுகமாகத் தன் பதவியிலிருந்தும், பாராளுமன்ற ஆசனத்திலிருந்தும் விலகினார்.

12.11.1987 – அரசியலமைப்புக்காகிய பதின்மூன்றாம் திருத்தமும் மாகாண சபைகள் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1988

18.01.1988 – நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கௌரவ ரொனி த மெல் தன் பதவியிலிருந்து விலகினார்.

28.04.1988 – வட – மத்திய, சப்பிரகமுவா, வட மேற்கு, ஊவா ஆகிய மாகாண சபைகளுக்காகிய முதல் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற்றன.

12.08.1988 – புலத்சிங்கள பா. உ. திரு. ரொனி த மெல் ஐ.தே. க. விலிருந்து விலகினார்.

07.09.1988 – சனாதிபதி ஜயவர்தன, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக ஒன்றிணைந்த ஒரு நிர்வாக அலகாகும் எனப் பிரகடனம் செய்தார்.

22.09.1988 – திரு. ரொனி த மெல், புளத்சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ஆசனத்திலிருந்து விலகினார்.

05.10.1988 – பாராளுமன்ற உறுப்பினர் ரொனி த மெல் அவர்களின் உறுப்புரிமையை முடிவடையச் செய்தல் வேண்டும் என்ற தெரிகுழுவின் அறிக்கையின்படி பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

11.11.1988 – கலாநிதி நிசங்க விஜயரத்தின, செல்டன் ரணராஜ ஆகியோர், வெலிக்கடைச் சிறைச் சாலையிலேற்பட்ட சம்பவங்களுக்கும் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தப்பிச் சென்றமைக்குமான பொறுப்பையேற்று முறையே நீதி அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகிய தங்கள் பதவிகளைத் துறந்தனர்.

19.12.1988 – இரண்டாம் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

20.12.1988 – இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

## 1989

02.01.1989 – திரு. ஆர். பிரேமதாச இரண்டாம் நிறைவேற்று அதிகார சனாதிபதியாக, ஸ்ரீ தலதா மாளிகையின் வரலாற்றுப் பெருமைமிக்க எண்கோண மண்டபத்தில் பதவிப் பிரமாணம் செய்தார்.

15.02.1989 – பொதுத்தேர்தல் இடம்பெற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது.

06.03.1989 – கௌரவ டி. பீ. விஜயதுங்க, இலங்கையின் பிரதம அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்தார்.

26.04.1989 – அரசாங்கத்திற்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் தொடங்கலாயின.

01.06.1989 – சனாதிபதி பிரேமதாச, இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கையிலிருந்து திருப்பியழைக்குமாறு இந்தியாவை வேண்டினார்.

13.09.1989 – இந்நாட்டில் நிலவும் அமைதியின்மைக்குத் தீர்வு காண்பதன்பொருட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அனைத்துக் கட்சி மகாநாடு நடைபெற்றது.

## 1990

11.01.1990 – அமைதி, ஒழுங்கு, இயல்புநிலை ஆகியவற்றை மீள நிலவச் செய்யத் தவறியமைக்காக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுத் தோல்வியடைந்தது.

28.03.1990 – பிரதம அமைச்சர் கௌரவ டீ. பீ. விஜயதுங்க, அமைச்சரவையை மீள அமைப்பதற்காகப் பதவி விலகினார்.

23.07.1990 – ஈழம் சனநாயக முன்னணியின் (ஈழப்புரட்சிகர மாணவர் அமைப்பு) பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து விலகினர்.

## 1991

09.08.1991 – நாட்டில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஈட்டுவதற்காகிய வழிமுறைகளை விதப்புரை செய்வதற்காகிய ஒரு தெரிகுழுவை நியமிக்க வேண்டும் எனத் திரு. மங்கள முனசிங்க கொண்டுவந்த பிரேரணை பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28.08.1991 – சனாதிபதி பிரேமதாசவுக்கு எதிரான அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணை சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

30.08.1991 – கௌரவ லலித் அத்துலத் முதலி, கௌரவ ஜீ. எம். பிரேமச்சந்திர, கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன ஆகியோர் தங்கள் அமைச்சர் பதவிகளைத் துறந்தனர்.

30.08.1991 – சனாதிபதி பிரேமதாச பாராளுமன்றக் கூட்டத்தொடரைத் தள்ளிவைத்தார்.

06.09.1991 – அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் கையொப்பமிட்டதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எண்மர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

25.09.1991 – திருவாளர்கள் லலித் அத்துலத் முதலியும் ஜீ. எம். பிரேமசந்திரவும் தங்கள் பதவிகளிலிருந்து தாம் விலகியமை பற்றிப் பாராளுமன்றத்தில் உரையாற்றினர்.

08.10.1991 – கௌரவ சபாநாயகர் எம். எச். மொஹமட் அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணையில் தேவைப்பட்ட செல்லுபடியான கையொப்பங்கள் இல்லையெனப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

10.10.1991 – அரசியல் குற்றச்சாட்டுச் சம்பந்தமாகச் சபாநாயகர் செய்த தீர்மானம் காரணமாகச் சபாநாயகர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்பட்டுத் தோல்வியுற்றது.

03.12.1991 – ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எண்மர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டமையை எதிர்த்துத் தாக்கல் செய்த விண்ணப்பம் உயர் நீதி மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

21.12.1991 – ஆறாம் "சார்க்" மகாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

## 1992

20.01.1992 – சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஓர் அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.

17.03.1992 }
19.03.1992 } – விமான வசுக்கள் கொள்வனவு, உர மானியம் நீக்கப்பட்டமை, வாழ்க்கைச்செலவு, ஊழல், வீண்விரயம் ஆகியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டுத் தோல்வியுற்றது.

03.06.1992 – அரசாங்கத்துக்குச் சொந்தமான பெருந்தோட்ட முயற்சிகளை முகாமை செய்வதற்கென 22 தனியார் துறைக்கம்பனிகளுடன் அரசாங்கம் உடன்படிக்கை செய்தது.

05.06.1992 – கொழும்பில் பெருவெள்ளம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தின் குழு அறை நீரில் மூழ்கியது.

21.08.1992 – எதிர்அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் கொலைக் கும்பல்களால் கொல்லப்பட்டமை, ஆயுதங்களும் நிதி முதலியனவும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டமை, தேர்தல் குற்ற நடவடிக்கைகள் ஆகியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்பட்டு தோல்வியுற்றது.

01.09.1992 – திருமதி சிறீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க, 1988 டிசெம்பர் 19ம் திகதி நடத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி பிரேமதாச தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்த முறையீடு உயர் நீதி மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

## 1993

15.03.1993 – மக்கள் ஐக்கிய முன்னணி ஓர் அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.

01.05.1993 – சனாதிபதி பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சி மே தின ஊர்வலத்தை ஒழுங்கு செய்து கொண்டிருந்த பொழுது ஒரு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

01.05.1993 – பிரதம அமைச்சர் கௌரவ டீ. பீ. விஜயதுங்க பதில் சனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

07.05.1993 – கௌரவ டீ. பீ. விஜயதுங்க இலங்கையின் சனாதிபதியாகப் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார். கௌரவ ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

17.05.1993 – இரண்டாம் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.08.1993 – அரசியலமைப்புச் சம்பந்தமான திருத்தங்கள், மாற்றங்கள் பற்றிய விதப்புரைகள் செய்வதற்கெனத் தெரிகுழு நியமிக்கப்பட்டது.

12.11.1993 – திரு. மங்கள முனசிங்க, சமாதானம் மற்றும் உறுதிப்பாடு பற்றிய தெரிகுழுவின் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

## 1994

26.01.1994 – சனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் திரு. காமினி திசாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார்.

05.05.1994 – வட கிழக்கில் சமாதானத்தைக் கொண்டுவரத்தவறியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, மானியங்களை நீக்கியமை, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை விற்றமை முதலியன சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்பட்டு தோல்வியுற்றது.

24.06.1994 – திருவாளர்கள் ஜே. நியதபால, லயனல் ராஜபக்ச, திலக் கருணாரத்ன, பிரதீப் ஹப்பங்கம, ஹலீம் இசாக், டொக்டர் நெவில் பர்னாந்து, ஆகிய சிறீலங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்தும் பாராளுமன்றத்திலிருந்தும் விலகினர்.

16.08.1994 – பொதுத்தேர்தல் நடைபெற்று பொ. ஐ. மு. அதிகாரத்துக்கு வந்தது.

19.08.1994 – திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

21.09.1994 – அரசியலமைப்புப் பற்றிய தெரிகுழு நியமிப்பதற்காகிய பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது.

06.10.1994 – ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குமிடையிலான இணக்க ஒப்பந்தம் பற்றிப் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இதன்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனிப்பட்ட அடையாளத்தைப் பேணிக்கொள்ளும்.

13.10.1994 – அரசாங்கத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

31.10.1994 – திரு. எஸ். தொண்டமான் அமைச்சரவையில் சேர்ந்தார்.

09.11.1994 – மூன்றாம் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

12.11.1994 – கௌரவ (திருமதி) சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கையின் நான்காம் நிறைவேற்று அதிகார சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

14.11.1994 – கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்க இலங்கையின் பிரதமராக மூன்றாம் முறையும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

## 1995

03.08.1995 – சமாதானப் பொதி ஒன்றை அரசாங்கம் முன் வைத்தது.

04.12.1995 – இலங்கைப் படைகள் யாழ்ப்பாண மாநகரத்தைத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டன.

19.12.1995 – இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 1996

08.04.1996 – திருமதி சிறீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க மீது குடியியல் தகவின்மை விதித்த 16.08.1980ன் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வதற்காகிய பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

09.07.1996 – மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

22.10.1996 – பகிரங்க தொழில்முயற்சிகள் புனர் நிர்மாணச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1997

25.07.1997 – கல்வியமைச்சரும், உயர்கல்வியமைச்சருமான கௌரவ ரிச்சர்ட் பத்திரன உத்தேசக் கல்வி சீர்திருத்தங்கள் பற்றிப் பாராளுமன்றத்தில் அறிக்கை விடுத்தார்.

11.09.1997 – 1978ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்துவதான பாராளுமன்ற (அதிகாரங்களும், சிறப்புரிமைகளும்) (திருத்த) சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

24.10.1997 – அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர், பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், அரசியலமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான அரசாங்கத்தின் ஆலோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படங்களில் உள்ள சம்பவங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04 - 02 - 1948 : பிரதம நீதி அரசர் சேர் ஜோன் ஹவாட் முன்னிலையில் மேதகு சேர் ஹென்றி மொங்க் மேசன் மூர் மகாதேசாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்தல்



04 - 02 - 1948 : மகாதேசாதிபதியுடனும், பிரதம நீதி அரசருடனும் புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கையின் முதலாவது அமைச்சரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10– 02 – 1948 : சுதந்திரச் சதுக்கத்திலுள்ள சபைக் கூடத்தில் மாட்சிமை தங்கிய கிளவ்செஸ்டர் கோமகன் தன்னாட்சி பெற்ற இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தைத் திறந்து வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12 – 02 – 1948 : பிரதம அமைச்சர் கௌரவ டி. எஸ். சேனநாயக்க அவர்கள் கண்டியிலுள்ள பத்திரிப்புவவில் தேசியக்கொடியை ஏற்றிவைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




10 - 06 - 1952 : இரண்டாவது பாராளுமன்றத்தை வைபவரீதியாகத் திறந்து வைத்த பொழுது பிரதம அமைச்சர் கௌரவ டட்லி சேனாநாயக்க சிம்மாசன உரையை மகாதேசாதிபதி சோல்பரிப் பிரபுவிடம் கையளித்தல்.



12 - 04 - 1954 : பிரதம அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவெல முன்செல்ல அவரைத்தொடர்ந்து மாட்சிமை தங்கிய II ஆம் எலிசபெத் மகாராணியார் பாராளுமன்றத்தின் வைபவரீதியான திறப்பு விழாவுக்கு வருகை தருதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




12 – 04 – 1954 : சுதந்திர மண்டபத்தில் மாட்சிமை தங்கிய IIஆம் எலிசபெத் மகாராணியார் இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரைத் திறந்து வைத்தல்.




20 – 04 – 1956 : மூன்றாவது பாராளுமன்றத்தின் வைபவரீதியான திறப்பு விழாவின் போது பிரதம அமைச்சர் கௌரவ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக அவர்களிடம் சிம்மாசன உரையைக் கையளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12 – 08 – 1960 : சுதந்திர மண்டபத்தில் ஐந்தாவது பாராளுமன்றத்தின் வைபவரீதியான திறப்பு விழாவின் போது பிரதம அமைச்சர் கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக அவர்களிடம் சிம்மாசன உரையைக் கையளித்தல்.




12 – 08 – 1960 : ஐந்தாவது பாராளுமன்றத்தை சுதந்திர மண்டபத்தில் வைபவரீதியாகத் திறந்து வைத்தபோது செனேற் சபை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மகாதேசாதிபதியின் சிம்மாசன உரையைச் செவிமடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




19 – 07 – 1970 : புதிய அரசியலமைப்பை ஆக்குவதற்கு அரசியலமைப்பு நிர்ணய சபையை ஏற்படுத்துவதற்காக நவரங்கஹலவில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும், அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சருமான கௌரவ கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா மற்றும் பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க ஆகியோர் புடைசூழ கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் வருகை தருதல்.




19 – 07 – 1970 : புதிய அரசியல் அமைப்பை அமைப்பதற்கான அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தும் தீர்மானத்தை நவரங்கஹலவில் பிரதம அமைச்சர் கௌரவ (திருமதி) சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் முன்மொழிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04 - 08 - 1977 : மேன்மை தங்கிய சனாதிபதி வில்லியம் கோபல்லாவ அவர்களிடம் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையைப் பிரதம அமைச்சர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்தன கையளிக்கின்றார்.



07 - 09 - 1978 : 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பைப் பிரகடனப்படுத்தல் - பாராளுமன்றத்தின் வைபவ ரீதியான அமர்வின்போது சபாநாயகர் கௌரவ ஆனந்ததிஸ்ஸ த அல்விஸ் அவர்களால் மேன்மை தங்கிய சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன உறுதிப்பிரமாணம் செய்து வைக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



29 – 04 – 1982 : சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் திரு. நிஹால் செனெவிரத்ன ஆகியோர் புடைசூழ புதிய பாராளுமன்றத்தின் வைபவ ரீதியான திறப்புவிழாவிற்கு மேன்மை தங்கிய சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களும் அவரது பாரியார் ஜயவர்தன அம்மையாரும் வருகை தருதல்.



24 – 09 – 1991 : இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இரண்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியில் தொடக்கி வைத்தபோது மேன்மை தங்கிய சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களும் அவரது பாரியார் ஹேமா பிரேமதாச அம்மையாரும் தேசிய கீதம் இசைக்கப்பட்ட வேளை எழுந்து நின்று மரியாதை செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06 - 01 - 1995 : கௌரவ சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க அவர்களும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் திரு. பேட்ரம் தித்தவெல்ல அவர்களும் புடைசூழ மூன்றாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரைத் திறந்துவைக்க மேன்மை தங்கிய சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் வருகை தருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அச்சகம், இலங்கை.